Registered as a Newspaper. பக்கங்கள் 10 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 18 (03-12-93) வெள்ளிக்கிழமை ஓசை 288

யாழ்ப்பாணம்

## மாவீரர்வார நிகழ்வுகள் கருத்துக் கூற கோரிக்கை

மாவீரர் வார நிகழ்வுகள் பற்றிய கருத்துக்களை, எண்ணங்களை தமக்குத் தெரியப்படுத்தி, மாவீரர் வாரத்தையும், மாவீரர் நாளையும் முழுநிறைவான திருநாட்களாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறுதமிழீழ மாவீரர் பணிமனையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுபற்றி தமிழீழ மாவீரர் பணிமனையினர் வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில்; தமிழீழத்தின் விடிவுக்காக, தமிழீழ மண்ணின் விடுதலைக்காக, தம்மை ஒப்புக் (09ஆம் பக்கம் பார்க்க)

# மூதூரில் புலிகளின் அதிரடிக்கு எட்டு இராணுவத்தினர் பலி!

## அதிகாரியும் கொல்லப்பட்டார்

(கொழும்பு)

**திருமலை மாவட்டத்தில் நேற்றுக் காலை ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட எட்டுப் படையினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.**

இத் தாக்குதல் சம்பவம் குறித்து தகவல் வெளியிட்ட சிறிலங்கா பாதுகாப்பு செயற்பாட்டு தலைமையகம் மூதூர் பூநகரியில் வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதே புலிகள் இத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்தது.

மேலும் அதிகாலைப் பொழுதில் நடைபெற்ற இத் தாக்குதலின்போது ஓர் இராணுவ அதிகாரி உட்பட எட்டுப் படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வடமராட்சிக்கரை நோக்கி 'டோறா' பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பிராந்தியத்தில் சிறிலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மீனவர்கள் மீதும் கரையோரக் குடியிருப்புக்கள் மீதும் பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறை நோக்கி சென்றுகொண்டிருந்த இரண்டு ''டோறா'' விசைப் படகுகளிலிருந்து வல்வெட்டித்துறை முதல் தொண்டமானாறு வரை மாறி மாறி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதலினால் அக் கடற் பிராந்தியம் சிலமணிநேரம் அதிர்ந்த வண்ணமிருந்தது

கடற்படையினரின் இப் பீரங்கித் தாக்குதலினால் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் கடலில் குதித்து ஒருவாறு கரைசேர்ந்தனர்.

(யோ)

## தாக்குதலைக் கண்டித்து இன்று மௌன ஊர்வலம்

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தின் மீது சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான சுப்பர்சொனிக் விமானம் கடந்த மாதம் 13 ஆம் திகதி நடத்திய தாக்குதலைக் கண்டித்தும்; இதர வழிபாட்டுத் தலங்கள், மருத்துவ மனைகள், பாடசாலைகள், செயலகம், பொதுமக்கள் வதிவிடங்கள் மீதான தாக்குதல்களையும் கண்டித்தும் இன்று காலை 9 00 மணிக்கு யாகப்பர் ஆலய முன்றலில் இருந்து மாபெரும் மௌன ஊர்வலம் நடைபெற இருககிறது.

பங்குத்தந்தை வண. ஆர் எம் ஜி. நேசநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற இருக்கும் மௌன ஊர்வலத்தில் யாழ். ஆயர் கலாநிதி தோமஸ்சவுந்தரநாயகம்ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் சிறீலசிறி சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மற் (10ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பலாலி படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பதினாறு கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வடபகுதியின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிறிலங்காப் படைகளினால் கைது செய்யப்பட்டு ஒருவருடத்துக்கும் மேலாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர்கள் தற்பொழுது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சி காரணமாக இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இருவர் தற்பொழுது பலாலித் தளத்தில் தங்கியுள்ளனர். இவர்கள் மீண்டும் நாளை யாழ்ப்பாணம் வந்துசேருவார்கள். விடுதலை செய்யப்பட்டவர்களில் 14பேரையும் இவர்கள் அழைத்துக் கொண்டு வருவார்கள் மிகுதி இருவரும் திருக்கோணமலைக்குச் சென்றுவிட்டனர். (க),(நி)

### இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு

## அரசாங்கத்தை வற்புறுத்த மதத்தலைவர்கள் தவறிவிட்டனர்

### கலாநிதி சந்திரகாந்தன்

(லண்டன்)

''இலங்கையின் இனப் பிரச்சினையைச் சமாதான வழிகளில் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு சிறிலங்கா அரசை வற்புறுத்துவதற்கு மதத்தலைவர்கள் தவறிவிட்டனர்'' இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரும் இப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவருமாகிய கலாநிதி சந்திரகாந்தன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். இப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில். வருடஆரம்பத்தில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவும் அதைத் தொடர்ந்து சர்வமதக்குழுவினரும் யாழ்ப்பாணம் வந்து சென்றனர்.

ஆயர் கென்னத் பெர்னாண்டோவைச் சந்தித்த தலைவர் பிரபாகரன் சமாதானத்தின் கதவுகள் திறந்திருக்கின்றன அரசு முயற்சிசெய்தால் பேச்சுவார்த்தைக்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கலாம் இதன்மூலம் சமாதானத்துக்கான சூழ்நிலையை ஏற்படுத்தலாம் என்றவகையில் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆயினும் சமயத் தலைவர்கள் இக்கருத்தைத் தொடர்ந்து இனப்பிரச்சினையை சமா (10ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி கடன் மீளல்

இதுவரை காலமும் தமிழீழ மீட்புநிதி கடன் மீளலுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களில் கடந்த மாவீரர் வாரத்தில் தமிழீழமீட்புநிதிக் கடனை மீளப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைமு. ப. 11மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசிமகாவித்தியாலயத்தில்பெற்றுக்கொள்ளலாம் என மீட்புநிதிப் பொறுப்பாளர் தெரிவித்துள்துள்ளார்

## பொலிசாரால் கைதான 500 பேரை காணவில்லை

(கொழும்பு)

தென் இலங்கையில் பொலிசார் மற்றும் ஆயுதக் குழுக்களால் இதுவரை கைதாகியவர்களில் 500 தமிழர்களின் நிலைமைகுறித்து எவ்வித தகவல்களும் இல்லை என காணாமற் போனவர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

சிறிலங்காப் பொலிஸ்படையினராலும் இனந் தெரியாத ஆயுதக் குழுக்களினாலும் கொழும்பிலும். புறநகர்ப் பகுதிகளிலும் மற்றும் தோட்டப்பகுதிகளிலும் கைதான 500 இளைஞர்கள், யுவதிகள் பற்றியதகவல்களாவும் அவர்களது பெற்றோருக்கு இன்னமும் தெரியாது என மேற்படி சங்கத்தின் தலைவர் வி. பத்திரானா கூறியுள்ளார்

இதுவரை பொலிசாராலும் ஆயுதக்குழுக்களினாலும் 2000க்கும்மேற்பட்டோர்முகத்துவாரம், வவுனியா ஆகிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பூநகரிச் சம்பவத்துக்கு பொறுப்பேற்று அரசு பதவி விலகவேண்டும்

### சிறிமாவோ கோரிக்கை

(கொழும்பு)

பூநகரிச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று அரசும், இராணுவத்துக்குப் பொறுப்பானவர்களும் பதவி விலகவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்கா அரசு பாதுகாப்புச் செலவுகளுக்கு என ஒதுக்கிய நிதி வீணில் செலவாகியதாகவும், இவ்வாறு ஏற்படும் வீண் செலவுகளுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்றும் அவர் கூறினார். படையினரின், பெற்றோருக்கு உடுக்க உடுப்புகள்கூட இல்லாதுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இராணுவத்தினர் ஆயுதங்கள், உபகரணங்கள் இல்லாமல் நின்றனர். ஆனால் இராணுவத் தளபதியோ பலாலிக் (10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### கோழிக்குஞ்சு

இரண்டரை மாத Prema Brown பேட்டுக் குஞ்சுகள் (இன்னும் ஐம்பது நாட்களில் முட்டையிடும்) நான்கு வார Prema Brown சேவல் குஞ்சுகள் உடனடி விற்பனை உரும்பராய் சந்தி (கலையரங்கம் அருகில்) (6746)

### தவறிவிட்டது

14 10·93 திகதியன்று யாழ்ப்பாணத்தில் இருந்து சங்கரத்தைக்கு செல்லும் வழியில் ஏ. இராசையா சங்கரவத்தைவட்டுக் கோட்டை ஆகிய எனது காணி உறுதிகளை தவறவிட்டு விட்டேன். எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (6758)

### அப்பியாசக் கொப்பி

மாணவர்களின் சீருடைகள் பிரகாசமான வெண்மையுடன் விளங்கிட மில்க்வைற் நீலசோப், மில்க்வைற் சலவைத்தூள் உதவுகின்றன. 25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள்/ சலவைத்தூள் வெற்றுப்பக்கற்றுகள் தருபவர்க்குஒரு அப்பியாசக்கொப்பி அன்பளிப்பு. ''மில்க்வைற்'' (சி|8043)

### மாமைட் போத்தல்கள் தேவை

பிளாஸ்டிக் முடியுடன் கூடிய சகல அளவிலுமான வெற்றுமாமைட் (MARMITE) போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகின்றது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-8004)

### பெற்றுக் கொள்ளவும்

மகாலட்சுமி வேலுப்பிள்ளை என்பவரது அடையாள அட்டையும் ரூபா 500|-, புகைப்படங்களும் அம்பாள் சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர் க. தியாகராஜா என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு கீழ் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும் அம்பாள் சனசமூக நிலையம், வட்டு தெற்கு வட்டுக்கோட்டை. (6752)

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

### பட்டப்பின் டிப்ளோமா பொது நிர்வாகம் முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 1993

1993-10-11 ஆரம்பமாகவிருந்துபிற்போடப்பட்ட மேற்படி பரீட்சை 1993-12-14 தொடக்கம் 1993-12-19 வரை நடைபெறவுள்ளது பரீட்சார்த்திகள் இரண்டாம் அரையாண்டிற்கான பதிவை மேற்கொண்டவர்கள் மட்டுமே பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். நேர அட்டவணையையும், அனுமதி அட்டையையும் பரீட்சைக் கிளையில் இரண்டாம் அரையாண்டிற்குப் பதிவு செய்த பிரதிப் பற்றுச் சீட்டைக் காண்பித்தல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

—பதிவாளர்

(சி-8042)

# பரீட்சை முடிவுகளை விரைவில்எடுத்துவர முயற்சி

யாழ். மாவட்ட மாணவர்களின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை விரைவாக எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் வெளியாகியுள்ள மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளைஉடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரும் அவசர வானொலிச் செய்தி ஒன்றை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் கொழும்பில் தங்கியிருக்கும் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார். (க) (நி)

## "THE BREEZE"

The Old Students' Association of Kokuvil Hindu College extends its Warmest Greetings to "THE BREEZE", the maiden Souvenir of the English Union of Kokuvil Hindu College, which is being released today.

Long live "THE BREEZE"!
May you blow forever!

O. S. A.
Kokuvil Hindu College,
03 - 12 - 1993

(சி- 8040)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை மரியாள்

(வினாயகமூர்த்தி வரலட்சுமி)

| தாயின் மடியில் | மணலாறு மண்ணில் |
|---|---|
| 29- 9- 72 | 12- 12- 92 |

திதி 3- 12- 1993

நிலையான உறுதி கொண்டு தளராத தாகம் சுமந்து தலைவனின் லட்சிய கொள்கை ஏற்று தமிழீழம் காணவேண்டும் என்று பிஞ்சு வயதிலே போர்க்களம் புகுந்து மரியாள் என்னும் பெயரும் கொண்டு நீகாட்டிய வீரம் எத்தனை எத்தனையோ ஈழநன் நாட்டின் விடியலைத்தேடி பறந்திட்ட வெண்புறாவுக்கு எமது அஞ்சலிகள்.

வடலி அடைப்பு
அரசடி வீதி,
பண்டத்தரிப்பு. (6759)

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

# நினைவு கூருகின்றோம்...

## 1993-12-03

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**நிசாம்** (சீனித்தம்பி குமார் - பொத்துவில்-அம்பாறை)

வவுனியாவில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1985ஆம் ஆண்டு முல்லைத்தீவு தண்ணிமுறிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரச்சாவெய்திய-

**கேசவன்** (நல்லையா அருள்நேசன் - வண்ணாங்கேணி - பளை)

பளைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

❋ **சுந்தரி** (வீரசிங்கம் சுந்தரராஜன் - இயக்கச்சி)

வவுனியாவில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டு - வாழைச்சேனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**இராசமணி** (நடராசா இராசநாயகம் - கண்ணகிபுரம் வாழைச்சேனை - மட்டு)

**இராஜசெல்வம்** ( — அமிர்தகழி - மட்டு)

1987ஆம் ஆண்டு கொழும்பு நோக்கிச் சென்ற பேரூந்து மட்டுநகரில் வழி மறித்து இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 11 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு நாவற்குழிப்பகுதியில் இந்தியப் படையினர் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப்.அருள் யோகம்** (நவரட்ணம் அருட்செல்வம்-நாவற்குழிதெற்கு-சாவகச்சேரி)

கீரிமலை, கருகம்பனையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்

**அண்ணா** (சிவதாசன் நிர்மலன்-காங்கேசன்துறை-யாழ்)

யாழ்-கோயில் வீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த தமிழர்.

1991ஆம் ஆண்டு மன்னார்-சிலாவத்துறை முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் அகத்திமுறிப்புப் பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.மங்களன்-ரஞ்சித்** (சின்னத்துரை விமலேஸ்வரன்-கித்துள், மட்டு)

**கப்டன் பாவலன்-ஜிம்மால்** (பூபாலப்பிள்ளை ஜெகதீஸ்-புதுக்குடியிருப்பு, மட்டு)

1992ஆம் ஆண்டு 02-12-92 அன்று வவுனியா-மன்னார் எல்லையில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய,

**அமுதராசன்-அமுதன்** (இராசரத்தினம் கணேசலிங்கம்-7-ம் வட்டாரம், புங்குடுதீவு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8039)

## நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

❋ சிற்றிஷன் கஸியோ கைக்கடிகாரங்கள்
❋ வீடியோ ஓடியோ கசெற் மற்றும் பிலிம்றோல்கள்
❋ கசற்றேடியோ, வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள்
❋ ஒறிஜினல் மக்ஸல் மணிக்கூட்டு பற்றறிகள்
❋ புரட்சிப்பாடல்கள் தத்துவப்பாடல்களைதரமான முறையில் பதிவு செய்பவர்கள்

மற்றும்

**உங்கள் எலக்றோனிக் பொருள்களை கொள்வனவு செய்பவர்கள்**

கைக்கடிகாரங்கள் மற்றும் றேடியோ, கசற்செற், டெக், ரீவிக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுப்பவர்கள்

தொடர்புகளுக்கு:

# மின்வளம்

இல· 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8046)

# அமெரிக்க இராணுவத்தில் பெண்களின் சம உரிமைக்கான போர்

அமெரிக்க இராணுவத்தில் பெண்கள் போர் முனைகளில் நேராகச் சண்டை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. மாற்று நடவடிக்கையாகப் போர் முனையில் போர்க்காலச் சேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகிறார்கள். போர் முனையில் முன்னணிக்குப் போய் விட்டால் அவர்களுக்கு ஆபத்து நேர்ந்துவிடும். அல்லதுபோர்க் கைதிகளாகப் பிடிபட்டு விடுவார்கள் என்பது அமெரிக்க சிந்தனையின் மற்றைய பரிமாணம். இதற்கு அமெரிக்க இராணுவச் சட்டங்களும் துணை போகின்றன. இந்நிலை அமெரிக்க சமூக அமைப்பின் நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டதாகும். உலகில் 'உன்னதமான நாகரிக' நாடான அமெரிக்காவில் இந்த துரதிர்ஷ்டம் நடைபெறுகிறது. ஆண் - பெண் வித்தியாசத்தைப் போக்கி இருபாலாரும் சரிநிகர் சமானமாக நடாத்தப்பட வேண்டும் என்ற கண்டனக்குரல்கள் இப்போது எழுந்துள்ளன. பெண்கள் சண்டையில்ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கும் சட்டங்கள் (Combat Exclusion Laws) நீக்கப்பட வேண்டும் என்று விசாரணைக் குழுக்கள் சீர்திருத்தச் சிபார்சுகளைச்செய்துள்ளன. ஆனால், அதேவேளையில், அமெரிக்கப் பாதுகாப்புப் படைகள்-இராணுவம், விமானப் படை, கடற்படை- மூன்றும் ஆண் அதிகார வரன்முறைப்பட்ட அமைப்புக்குள்ளேயே செயற்பட்டு வருவதால் சமத்துவக் கோட்பாடுகளை எதிர்க்கும்மனோநிலையும் காணப்படுகிறது.

அண்மைக்காலம் வரை சாதாரண அமெரிக்கப் பிரஜைகள் இது குறித்து அதிகம் அக்கறை காட்டவில்லை. பெண்நிலை வாதிகளும் அலட்டிக் கொள்ளவில்லை. இப்போதுதான் அமெரிக்க பாதுகாப்பு படைகளின் இந்தப் போக்கை எதிர்க்கும் கட்டம் படிப்படியாக உருவாகத் தொடங்கியுள்ளது.

1989 டிசம்பரில் அமெரிக்க இராணுவம் பனாமா நாட்டை ஆக்கிரமித்தது. இதற்கான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட 24,500 அமெரிக்கப் படைகளில் சுமார் 600 பேர் பெண்கள். கப்டன் லின்டா கிறே என்ற பெண் தலைமையில் ஒரு இராணுவப் பொலிஸ் படைப்பிரிவு, பனாமா இராணுவத்தின் காவல் நாய்ப் பட்டித் தொகுதியின் (Guard - dog Kennel) மீது தாக்குதல் நடத்தியது. இது குறித்து மக்கள் தொடர்புச் சாதனங்கள் பிரமாதப் படுத்தி செய்திகள் வெளியிட்டன. அமெரிக்கப் படைப் பிரிவுகளில பெண்களுக்குச் சமூகநீதி கோரும் ஒரு உந்துகையாகவே இச் செய்திகள் வெளியிடப்பட்டன. ஐரோப்பா முழுவதும் இச் செய்தி பத்திரிகைகளில் பரபரப்பாக அலசப்பட்டது. இதன் பிறகு அமெரிக்கப்படைகளில் பெண்கள்ஒதுக்கப்படுவது ஒரு விவாதத்துக்குரிய விஷயமாகவே வளர்ந்துள்ளது. இவ்வாறான நெருக்கடிகளிலிருந்து பெண்களை விடுவிப்பதற்கான உபாயங்கள், வழிமுறைகள் குறித்து அமெரிக்க மகளிர் அமைப்புகள் அக்கறைகாட்டுகின்றன.

## அமெரிக்க இராணுவத்தில் பெண்கள் பங்கு

அமெரிக்கபாதுகாப்புப்படைகளில் பெண்கள் அங்கம் வகிக்கின்றமை ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஆனால் போர் முனைகளில் பெண்கள் இரண்டாம் பட்ச நிலையில் வைத்துத்தான் நோக்கப்படுகிறார்கள். 1948க்கு முந்திய காலப்பகுதியில் இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் போதுபெண்களும் சேர்க்கப்பட்டனர். 1901இல் பெண் தாதிகள் படைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 1908 இல் கடற்படை பெண் தாதிகள் பிரிவுஉருவாகியது. தொடர்ந்தாற் போல் 1917 இல் கடற்படை ரிசேவ் பிரிவுக்குப் பெண்களைச் சேர்க்கக் கடற்படைத் தலைமை அனுமதித்தது. கடறபடைக்கு முக்கிய உதவியாய்அமையும்வானொலித் தொடர்பு மற்றும் மின்சாரம் சம்பந்தமான வேலைகளுக்கே ரிசேர்வ் படையில் பெண்கள்சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதே மாதிரியான ஒரு திட்டத்தை 1918இல் கடலோரப் படை (Marine Corps) அமுல்படுத்தியது. 2-வது உலக யுத்தத்தின் போது அமெரிக்க இராணுவத்தில் நிலவிய ஆள் அணி பற்றாக்குறையை அனுசரித்து 1942இல் பெண்கள் துணைப் படைப் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பின்னணியில், திருமதி ரூஸ்வெல்டின் தலையீடு காரணமாக, அரசியல் சூழலிலேயே 1942 இன் பிற்பகுதியில் பெண்கள்துணைப்படை உருவாகியது. இது 1943 இல் பெண்கள் இராணுவப் பிரிவாக மாற்றப்பட்டு சம்பூரண இராணுவ அந்தஸ்து வழங்கப்பட்டது. இராணுவத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு கருத்து நிலையான அம்சம் என்றே கொள்ளப்பட வேண்டும். பெண்கள் கடலோரக் காவற்படை SEMER PARATUS (எப்பொழுதும் தயார் - Always Ready) என்ற சொற்களின் முதல் எழுத்துக்களால் அமைக்கப்பட்ட SPAR என்று மாற்றப்பட்டது. பெயரில், பெயரளவில்தான் மாற்றம். இதனால் போர் முறையில் சமநிலை மாறாத நிலை என்று கருத முடியாது. 2 - வது உலக யுத்த முடிவில் சுமார் 12, 000, 000 எண்ணிக்கை கொண்ட அமெரிக்கப் படையில் 350, 000 பேர் பெண்கள் முதலாவது உலக யுத்தத்தில் அமெரிக்க படைக் சேவையில் பெண்களின் எண்ணிக்கை 39, 000 இருந்தது.

பெண்கள் இராணுவச் சேவை இணைப்புச் சட்டம் - 1948 (women's armed ser Vices Integration act - 1948) அமெரிக்கப் படைகளில்பெண்களுக்கு நிரந்தரத் தன்மையைத் தந்த சட்டம் ஒன்று சொல்லப்படுகின்றது. இந்தச் சட்டத்தில் விஷேசம் என்னவென்றால், சட்டம் அமெரிக்கப் பாதுகாப்புப் படைகளில் பெண்களுக்கு நிரந்தரத் தன்மையை ஒழுங்கு படுத்திவரையறை செய்தது. அதேவேளை அமெரிக்க இராணுவத்தில் பெண்களை எந்த இடத்தில் வைப்பது என்பதினையும் இச் சட்டம் வரையறை செய்துள்ளது. ஒரு எதிர்பாராத திருப்பம். அமெரிக்க இராணுவத்தில் உள்ள பெண்கள் போரில் நேராகப் பங்கு பற்றுவதற்கு (combat) இச் சட்டம் தடைவிதித்தது. மேலும் படையில் ஆள் சேர்ப்பதற்கு ஆண் - பெண் இருபாலாருக்கும் இடையில் வித்தியாசமான வயது எல்லையை அறிமுகப் படுத்தியதோடு, பதவி உயர்வுகள் தொடர்பாகப் பெண்களுக்கென பிரத்தியேகமான முறையையும் இச் சட்டம் அமுல்படுத்தியது. பதவிஉயர்வுகளும் குறிப்பிட்ட விகிதாசாரத்தில்தான் தேசிய நெருக்கடி காலத்தில் மாத்திரம் தான் இராணுவப் பயிற்சி பெற்ற பெண்களைபோரில்நேராகஈடுபடுத்துவதற்கு பெண்கள் இராணுவச் சேவை இணைப்புச் சட்டம் இடமளிக்கிறது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இச் சட்டத்தின் கீழ் இராணுவத்தில் பெண்களுக்கு சம உரிமைக்கு வகை செய்யப்படவில்லை.

## சமீபகாலத்திய யுத்த பூனைகளில் பெண்கள்

அமெரிக்க இராணுவ வழக்கப்படி யுத்தத்தில் நேரடியாகப் பங்கு பற்றுதல் என்பது பல்வேறு நிலைகளைக் குறிக்கும் நேரடிப் போர்ப் பணி நெருக்கமான யுத்தம் நேரடிச் சண்டை யுத்த உதவி, யுத்த உதவிச் சேவைகள் என்று பல்வேறுபட்டபணிகள் நடைமுறையில் உள்ளன. விநோதமாக அமெரிக்க

## நாகரிகம் வளர்ந்தும் உரிமை கிட்டவில்லை

இராணுவத்தில் பெண்கள் அதிகமாக யுத்த உதவிச் சேவைகளில் தான் அமர்த்தப்படுகிறார்கள். இந்த வகையில், 2- ஆம் உலக யுத்தத்தில் 200 க்கும் அதிகமான பெண் தாதிகளும் முதலாம் உலக யுத்தத்தில் 200 பெண் தாதிகளும் கொல்லப்பட்டனர். மேலும், வியத்நாம் யுத்த முனையில் ஏழு பெண் தாதிகள் உயிரிழந்தனர். இனி யுத்த முனைகளில் பலர் கைதாகினர். லிபியா, கிறண்டா, ஹொண்டூரஸ், பனாமா மற்றும் பாரசீக வளைகுடா யுத்தத்தில் பெண்கள் படைப் பிரிவுகளை அமெரிக்கா யுத்த உதவிச் சேவைகளில் அமர்த்தியது 1974 இல் பெண் விமானிகள் பெய்ரூட் விமான நிலையத்தில் சிக்கியிருந்த அமெரிக்கக் கடலோரப் படையினருக்கு யுத்த உதவிகள் வழங்கும் பணியில் செயலாற்றினர். 1983 கிறண்டா படையெடுப்

**மதன்**

பின் போது பெண் விமானிகள் இராணுவத் தளபாடம் மற்றும் யுத்த உதவிகளை அமெரிக்கப் படைகளுக்கு வழங்கினர். கொண்டூரஸ் விவகாரத்தில் அமெரிக்கா கையை நனைத்த போது அமெரிக்க இராணுவ வாகனங்களைத் திருத்தும் பணிகளுக்கு பெண்கள் குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. 1986- இல் லிபியா மீது அமெரிக்கா தாக்குதலை மேற்கொண்ட சமயம் அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த பெண் விமானிகள் யுத்த உதவிச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். மற்றும் எவ்.பி 111 தாக்குதல் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் கொள்கலன் விமானங்களையும் ஓட்டிச் சென்றனர். 1987 இல் ஈராக் ஈரான் யுத்தத்தில் அமெரிக்க சரக்குக் கப்பலான யு. எஸ். எஸ் ஸ்ரார்க் ஈராக் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகி 37 மாலுமிகள் கொல்லப்பட்டனர். மீட்புப் பணிக்கு ஆகேடியா என்ற நாசகாரிக்கப்பல் அனுப்பப்பட்டது. இந்தக் கப்பலில் சென்ற படையினரில் இருபது விகிதமானவர்கள் பெண்கள். 1989 இல் பனாமா யுத்தத்தின் போது நாய்ப் பட்டியைத் தாக்கும் பணி பெண்கள் இராணுவக் கோஷ்டிக்குத் தரப்பட்டது.

பனாமா யுத்தத்தின் போது பெண் அதிகாரிக்குத் தகைமை இருந்தும், அவருக்குப் பதிலாக ஆண் அனுப்பப்பட்டதை ஆட்சேபித்து, அது தவறென அறிவிப்புச் செய்யக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது 1990 இல் இந்த வழக்கைத் தாக்கல் செய்த சார்ஜன்ட் றொன்டா மஸ்கஸ் என்ற பெண் அதிகாரி, பனாமா யுத்த முனைக்கு அனுப்பப்பட்ட ஆண் அதிகாரியை விடத் தனக்குத்தகைமைகள் அதிகம் என வாதிட்டார். அதே வேளையில், இது பற்றிக் கருத்து வெளியிட்ட இராணுவ முகாமைத்துவ மற்றும் ஆளணிக்கான பாதுகாப்பு உதவிச் செயலாளர் கிறிஸ் தோப்பர் "இந்த முறைகேட்டுக்கு இராணுவம் பொறுப்பல்ல. சமூகம் மற்றும் அரசியல் மட்டத்தில் உள்ள எதிர்ப்புகளே பெண்களை முழுமையாக இராணுவத்தில் இணைத்துக்கொள்ள முடியாதமைக்குக் காரணம்" என்றார்.

இப்போது வந்துள்ள ஈராக் யுத்த அறிக்கை விபரங்கள் "பாலைவனப் புயலில்" 33,000 அமெரிக்கப் பெண் படையினர் யுத்த உதவிச்சேவைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. பாலைவனப் புயலில் 12 பெண்கள் கொல்லப்பட்டனர். இரண்டு பேர் சிறைபிடிக்கப்பட்டனர். வளைகுடா யுத்தத்திலும் அமெரிக்கப்படை அணிகளுக்கு உதவியாகவே பெண்கள் உபயோகிக்கப்பட்டனர். அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் டிக்சென்னி, வளைகுடா யுத்தம் பற்றிக் கருத்துக் கூறுகையில், "யுத்த முனைகளில் பெண்கள் சண்டையில் நேராக ஈடுபடுவதற்கு உள்ள தணிக்கை தளர்த்தப்படுதல்வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் பென்ரக்கன் பெண்களை முழுமையான இராணுவ சேவையில் இருந்து விலக்கி வைக்கும் எண்ணத்தையே பிரதிபலிக்கின்றது. உதாரணமாக, வெற்றிடங்களைஆண்களைக் கொண்டே நிரப்ப முற்படுகின்றது. பெண்கள் இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தாலும், போதியளவு தகைமையிருந்தும் அவர்களது விண்ணப்பங்கள நிராகரிக்கப்படுகின்றன எப்படியாவது பெண்கள் இராணுவத்தில் சேர்ந்தாலும், சிலதுறைசார் பயிற்சிகள் அவர்கள் பெறுவதற்குக் கதவடைக்கப்படுகின்றது.

## பெண்களுக்கு எதிரான புகார்கள் எதிர்வாதங்கள்

○ பெண்கள் யுத்தத்தில் சாகக்கூடாது அல்லது காயப்படக் கூடாது என்று நியாயப்படுத்துகிறார்கள். ஆனால், அமெரிக்க இராணுவ வரலாற்றை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டால், தேச மட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் குறைவான சமயங்களில் இராணுவத்தில் பெண்களின் தேவைகுறைத்து மதிப்பிடப்படுகிறது. இராணுவ நெருக்கடி காலங்களில் மனித வலு அதிகமாகத் தேவைப்படுவதால், இராணுவத்தில் சேர்க்கப்படும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. ஆண்-பெண் உயிர் சார்பாக வெவ்வேறு விதமான மதிப்பீடுகள் புத்திபூர்வமானதல்ல என்று அமெரிக்க அறிவு ஜீவிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்

○ அடுத்தது பெண்களின் உடல்வலு பற்றியது. அழுத்தங்களைச்சகிக்கும் ஆற்றலும், நேரடியான மோதல்களின் போது ஏற்படக் கூடிய துன்பங்களைத் தாங்கும் தன்மையும் பெண்களிடம் குறைவு என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. எந்த விதமான யுத்த நடவடிக்கைகளுக்கும், அது எதுவாயினும் உடல்வலு அவசியம் என்பதுநடைமுறை. இராணுவத்தினருக்கு இருக்க வேண்டிய பல தகைமைகளில் உடல் வலுவும் ஒன்று. ஆனால், இராணுவ வீரனின் திறமையை உடல்வலு மாத்திரம் தீர்மானிப்பதில்லை என்று தர்க்கரீதியாகப் பதில் தரப்படுகிறது. தானியக்கிகள், மின்னியக்கச் சாதனங்கள் யுத்த களத்தில் பாவனையில் இருக்கும் இன்றைய நிலையில், அறிவும் முக்கியமான ஒரு அம்சம் எனக்கருதப்படுகிறது. "வீடியோ விளையாட்டுக்களில் ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்கள் இல்லை" என்கிறார் முன்னாள் கடற்படை அதிகாரி. மேலும், இராணுவ சேவைக்கு "சராசரி" ஆண் மற்றும் பெண்களே தேவைப் படுகிறார்கள். மெய்வல்லுனர் தேவைப்படுவதில்லை. தென் கிழக்கு ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், பிரான்சு நாட்டு ஆதிக்கத்திற்கும் எதிராகப் போர் செய்த வியற்கொங் வீரர் (ஆண், பெண் இருபாலாரும்) சராசரி அமெரிக்க இராணுவ வீரர்களை விட உடலமைப்பில் சிறியவர்கள். ஆகவே, கட்டுமஸ்தான உடலமைப்பு இராணுவ வெற்றியைத் தீர்மானிககாது என்பதை வியற்கொங் உதாரணம் நிரூபணமாக்கி விட்டது

○ பெண்களின்இயற்கையான இயல்பு ஒருபடி மேலே சென்று, ஆண்களின் யுத்த முஸ்தீபுகளைக் கட்டுப்படுத்தும் என்றும், ஒருவரை ஒருவர் பாதித்து ஆண்களைச் செல்வாக்குக்கு உட்படுத்தும் என்றும் உளவியல் நியாயங்கள் சொல்லப்படுகின்றன இது வெறும் ஊகம் என்றும், பரஸ்பரத் தொடர்பும், குழு மனப்பான்மையும்தான் மனிதனின் நடவடிக்கையைத் தீர்மானிக்கின்றன என்று இதனை எதிர்த்துக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், பொது இலக்கில் அமைந்த அமைப்பு, ஆபத்தை எதிர்கொள்ளல் மற்றும் தியாக மனப்பான்மை ஆகியன இருபாலாருக்கும் பொதுவானது என்று கடற்படை அக்கடமியைச் சேர்ந்தவரும், தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக உறுப்பினரும், போட் நிறுவன ஆய்வாளருமான ஒருவர் கோடிகாட்டியுள்ளார்.

○ யுத்த முனைகளில் சண்டையிடப் பெண்களுக்கு உளவளம் போதாது என்றும் புகார் சொல்லப்படுகிறது. தீயணைக்கும் படை, நகரப் பொலிஸ் மற்றும் விபத்துச் சேவைகளில் கடமையாற்றும் பெண்கள் மனோதிடத்துடன் செயலாற்றியுள்ளார்கள் என்று ஆய்வுகள் உறுதி செய்கின்றன. 2-வது உலக யுத்தத்தில் யுத்தக் கைதிகளாக எதிரிகளிடம் சிக்கிய பெண்களைப் பற்றி ஆய்வாளர் விதந்துரைத்துள்ளார்கள். இதேபோன்று கறுப்பின மக்கள்யுத்த முனைகளில் போரா

(6ஆம் பக்கம் பார்க்க)

# விடியலை நோக்கிய தென்னாபிரிக்கா அழிவை நோக்கி நகர்த்தப்படுமா?

**பாலகுமாரன்**

அடுத்த வருடம் ஏப்பிரல் மாத இறுதி வாக்கில் நடைபெறப்போகும் பொதுத்தேர்தலின் பின்னர் உதயமாகவிருக்கும் புதிய சனநாயக தென்னாபிரிக்காவின் எதிர்காலம் ஒளியுள்ளதாக வளமிக்கதாக அமைய வேண்டும் என்பதே உலக மக்களின் எண்ணமாகும். ஆனால் அதே சமயம் தென்னாபிரிக்காவில் உள்ள சிலர் இத்தகைய எண்ணத்தைக்கொண்டிருப்பதாக தெரியவில்லை.

சில தினங்கட்கு முன்னர் யோகானஸ் பேர்க் நகரத்திலே நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நேரடியாகப் பார்த்தோம். தொலைக்காட்சி மூலம் கண்ணுற்றோரும்திடுக்கிட நேர்ந்தது. கறுப்பின மக்கள்மேல் ஒடுக்குமுறையைத் தொடரவிடும் A.W.B எனப்படும் ஆபிரிக்காளர் தற்காப்பு அணியினர் நடாத்திய இப்பேரணியே கறுப்பின மக்களும் காணப்பட்டமையே இத்திடுக்கிடுதலுக்குக்காரணமாகும்.

கறுப்பின சூலு குழுத் தலைவரான எமர்கோல்து புத்தலேசி (Mengoctu Buthalezi)யின் கட்சியானஇங்காதா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இவர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் வெள்ளை இனத்தவரோடு சேர்ந்து தாம் போராடப்போவதாக இவர்கள் சூளுரைத்தனர். இவ்வளவு காலமும் இத்தகைய தொடர்பினை மறுத்து வந்த புத்தலேசி இப்போது உண்மையை மறைக்கமுடியாது போயிற்று. இச்சம்பவம் புதிய தென்னாபிரிக்காவின் எதிர்காலத்தைச் சிதைக்கும் தன்மை வாய்ந்ததாக பலரும் இப்போது கவலையுறுகின்றனர். இரகசியமான முறையில் கறுப்பினத் தீவிரவாதிகளோடும், வெள்ளையரான வலதுசாரித் தீவிரவாதிகளோடும் பேச்சுவார்த்தைகளை மண்டேலாவும் சனாதிபதி டிகிளார்க்கும் மேற்கொண்டுவருகின்றனர். இருந்தபோதும் அவை பயனளிக்குமா என்பது கேள்விக்குறியே.

மிக அண்மையில்தான் 350 வருடங்களுக்கு மேலாகக் குடித்தொகையின் 70 சதவிகிதமான கறுப்பின மக்களை வந்தேறு குடிகளான ஐரோப்பியர் அரக்கத்தனமாக அடக்கி ஒடுக்கிய ஆட்சியின் முடிவைக்குறிக்கும்உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. 27 வருடகாலமாக மனச்சான்றின் கைதியாக சிறையில் வாடிய நெல்சன் மண்டேலாவின் அரசியல் முயற்சிகள் வெற்றிபெறும் நிலை நெருங்குவதாகத் தென்பட்டது.

கடந்த 3 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பலனாக இன, நிற வேற்றுமையற்ற சனநாயக தென்னாபிரிக்காவிற்கான இடைக்கால அரசியல் யாப்பொன்றை 26 கட்சிகள் கலந்துகொண்ட பேச்சுவார்த்தையின் விளைவாக உருவாக்கம் பெற்றது கறுப்பின, வெள்ளை இனத்தவரைச் சேர்ந்த பலகட்சிகள் எதிர்த்தபோதும் சில வெளியேறிய போதும் 16 க்கு மேற்பட்ட பெரும்பான்மைக் கட்சிகள் ஆதரவோடு இந்த யாப்பு வரையறுக்கப் பட்டுவிட்டது.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நடைபெறப்போகும் ஏறத்தாழ 400 உறுப்பினரைக் கொண்டதாகஅமையப்போகும் இந்நாடாளுமன்றமும் இடைக்கால நாடாளு மன்றமாகவேயிருந்து. தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட இடைக்கால யாப்பின் படி 5 வருடகாலத்துள் புதிய நிரந்தரமான அரசியல் யாப்பினை வரைய வேண்டும். தேர்தல் அடுத்த வருடம் நடக்கும் வரை முக்கிய கட்சிகளைக் கொண்ட தற்காலிக நிறைவேற்றுக் குழு அமைக்கப்பட்டு அது தற்போதுள்ள கிளார்க்கின் அமைச்சரவைக்கு சமாந்தரமாக செயற்பட வழி வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக பல்லாயிரம் கறுப்பின மக்கள் குருதி பாய்ந்தோடுகையில் இவ்வுடன்பாடு இப்போது இறுதியாக எட்டப்பட்டுவிட்டது.

இடைக்கால அரசியல் யாப்பு அடிப்படை சனநாயக, மனித உரிமைகளை பேணத்தக்க வகையில் வரையப்பட்டுள்ளது. இதுவரை காலமும் கறுப்பின மக்களை பிரித்தாள வசதியாக வகுக்கப்பட்டிருந்த கறுப்பின பழங்குடி மக்களுக்கான தனித்த தாயகப் பகுதிகளை ஒன்றிணைக்கும் அதே சமயத்தில் சகல இன, இனக்குழுக்களின் அடையாளங்கள் பேணப்படத் தக்க வகையிலும் இவ்வரசியலமைப்பு எழுதப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எது எப்படியிருந்த போதும் இப்போது தென்னாபிரிக்காமுன்னர் உலகால் ஒதுக்கப்பட்ட நாடல்ல. விதிக்கப்பட்ட தடைகள் யாவையும் நீக்கப்படலாம் என மண்டேலா கூறிய நிலையில் தென்னாபிரிக்கா இன்று உலகெங்கும் வரவேற்கப்படுகின்றது. மண்டேலாவின் இவ் அறிவிப்பு அடுத்த தென்னாசிய ஆளும் கட்சியாக AWC வரவிருப்பதை புதிய தென்னாபிரிக்காவின் முதல் சனாதிபதியாக மண்டேலா அமையவிருப்பதையும் மிகத் தெளிவாக்குகின்றது. இப்போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆளும் கட்சி போல் நடக்க தொடங்கி விட்டதாக பரவலாகக் கூறப்படுகின்றது. முக்கியமான அரசாங்க முடிவுகளில் அது இப்போதே தனது செல்வாக்கை பிரயோகிக்க தொடங்கிவிட்டதாகவும் கட்சியின் முக்கிய உயர் அதிகாரிகள் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் இப்போதே ஈடுபடத்தொடங்கி விட்டதாகவும் குறைகளும் கூறப்பட தொடங்கப்பட்டுள்ளது.

ஆனால், இவை எப்படியிருந்த போதும் மேற்படி நிலைமைகட்கு முற்றிலும் மாறுபட்டதாக புதிய தென்னாபிரிக்காவின் எதிர்காலத்தை முளையிலே கிள்ளிவிடக்கூடியவகையில் முனைப்புக்கள் பலவும் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன. இந் நிலைகவலைக்குரிய விடயமாக தென்படுகின்றது. தொடர்ந்தஒரு உள்நாட்டுக் கலவரம் இராணுவ சதிப்புரட்சி ஏற்படும் அபாயம் எனப் பல ஆபத்துக்கள் தலையின் மேலே தொங்கும் வாள் போல தென்னாபிரிக்காவில் உள்ளன. ஒரு உறுதியற்ற குழப்பங்கள் மலிந்த நாடாக தென்னாபிரிக்கா மாறக்கூடாது என்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இதுவரைவெற்றியளிக்காமை பெருத்த துயரத்தைத் தரும் செய்தியாகவுள்ளது.

குறிப்பாக70இலட்சம் சூலு மக்களின் தனித்த தாயகப் பகுதியான இதுவரை காலமும் இருந்த குவாசுலு (Kwuzulu) அமைந்துள்ள நோட்டால் பகுதிமிக்க கொந்தளிப்பாக இன்றுள்ளது. இதுவரை காலமும் வெள்ளையர் ஆட்சியின் கீழ் சிற்றரசன் போல செயற்பட்டு வந்த புத்தலேசிக்கு இனிவரும் தென்னாபிரிக்காவில் இடமில்லை என அவர் அஞ்சுகிறார். இதனால் குவாசுலு பகுதியை இணைக்கமுடியாது என்றும் கூடிய தன்னாட்சி கொண்ட கூட்டாட்சி (சமஷ்டி) முறையில் எதிர்கால தென்னாபிரிக்கா அமைய வேண்டும் என்பதும் அவர் வாதம். ஆனால் இதுவரை காலமும் தென்னாபிரிக்க அரசின் அடிவருடியாக இருந்து தமக்கு பெருத்த பின்னடைவுகளை ஏற்படுத்திய இந்ததா சுதந்திரக் கட்சியின் தலைவர் விரும்புவது அளிக்க மண்டேலா தயாராகவில்லை எனவே மோதல்கள் பழிவாங்கல்கள் கொலைகளாக இன்று பரிணாமம் எடுக்கின்றன. இது போலவே கறுப்பின பழங்குடி இன மக்கள் வாழும் இன்னொரு தாயகப் பகுதியில் புதியதென்னாபிரிக்காவோடு இணைவதை விரும்பவில்லை.

இதே போலவே மறுபுறத்தில் வெள்ளையின தீவிரவாதிகள் பெரும் கலவரத்தை உருவாக்க தயாராகி வருவதாக தெரிகின்றது. இதுவரைகாலமும் கறுப்பின மக்களை நசுக்கி அடிமையாக்க வாழ்ந்த இவர்கள் இப்போதுவெள்ளையினத்தவர்கட்கு தன்னாட்சி உரிமையும் தனித்த தாயகப் பகுதியும் வேண்டுமென குரலெழுப்பி ஆயுதங்களைச் சேகரித்து பயிற்சிகள் கொடுத்து நவநாசி வெறிக் குழுக்கள் போல இயங்கத் தொடங்கி விட்டனர். ஆனால் இவர்கள் கூறுவது போல் வெள்ளையர்க்கென புவியியல் ரீதியான தொடர்பான தாயகப் பகுதியை உருவாக்கத் தக்க நிலை அங்கு இல்லை. அத்தோடு கறுப்பின மக்களின் பகுதிகளில் வாழும் வெள்ளையினமக்கள் தமது இடங்களை விட்டு வேறிடம் போக விரும்புவதாகத் தெரியவில்லை. இருந்த போதும் இவ் வெள்ளையர் எதிர்ப்பை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது, ஏனென்றால் தென்னாபிரிக்க இராணுவத்தில் இவர்கட்கு நிரம்பிய செல்வாக்கு இருப்பதே இதற்கு காரணம். அத்தோடு இவர்களால் ஒரு தொடர்ச்சியான கெரில்லா போராட்டத்தை நடாத்த முடியாவிட்டாலும் அபாயகரமான முறையில் வன்முறைகளைத் தூண்டி பெரும் குழப்பங்களை, உயிரழிவை இவர்களால் ஏற்படுத்த முடியும். இதைக் கருதியே மீண்டும் தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்கள் பலியாகும் அவலம் தோன்றப் போவதாக மண்டேலா எச்சரித்து வருகின்றார். அண்மைக்காலமாக A. W. B. அமைப்பின் தலைவரான ரெரி பிளான்சின் நடவடிக்கையில் (Eupene Terre-Blanche) இவர்கள் எளிதில் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்பன புலப்படுத்துவதாகவே ஆய்வாளர் கருதுகின்றனர். சில சிறிய நகரங்களை விடுதலை பெற்ற பகுதிகளாகப் பிரகடனம் செய்வதும் இரகசிய வானொலிகளை நடாத்துவதும் தென்னாபிரிக்கச் சட்டத்தை இவர்கள் மதிக்கத் தயாரில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. வெளிப்படையாக ஆயுதம் தாங்கி எதிர்ப்புப் பேரணிகளை இவர்கள் இப்போது நடாத்தி கலகக் குரல் எழுப்புகின்றனர். இப்படியானஎதிர்ப்பு ஊர்வலம் ஒன்றில் தான் அண்மையில் சூலு இன மக்களும் கலந்து புதியதொரு அபாயத்தின் தொடக்கத்தை உணர்த்தியுள்ளனர். ஏற்கனவே பல்லாயிரக் கணக்கான கறுப்பின மக்கள் குருதி ஆறாகப் பாய்ந்த நிலையில் இன்னமும் அதே நிலை தொடருமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

எனவே அடுத்த வருடம் நெல்சன் மண்டேலாவிற்குக் கிடைக்கப் போகும் தென்னாபிரிக்க சுரண்டப்பட்ட பொருளாதார நெருக்கடியால் பாதிப்புற்ற புதிய வெளிமுதலீடுகள் வரத் தயங்கும் அதேசமயம் இருக்கும் முதலீட்டால் வெளியேற விரும்பும் நிலையை கொண்டதாக இருக்கப் போகின்றது. அதேசமயம் வேலை வாய்ப்பற்ற கல்வி மறுக்கப்பட்ட வெள்ளையின எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு இன்று என்ன செய்வதென தெரியாது திகைக்கும் கறுப்பின இளைய தலைமுறையின் எதிர்பார்க்கைகளையும் மண்டேலா நிறைவேற்ற வேண்டும் அதேசமயம் இறுக்கமற்ற கட்சிக்குள் பல உட்பிளவுகளும் உண்டு. இத்தகைய நிலையில் கறுப்பின வெள்ளையின எதிர்ப்பாளர்களையும் மண்டேலா சமாளிக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் விட கடும் போக்கினைக் கொண்ட இராணுவத்தையும் அதன் இரகசிய உளவு அமைப்புக்களையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும்.

இப்போது மண்டேலா தனது முன்னைய போராளிகள் பலரை இந்தியா உட்பட பல நாடுகட்கு இராணுவ பயிற்சிகட்கும் வேறு இராசதந்திர நெறிகளை கற்கவும் அனுப்பி விடுகின்றார். அதே சமயம் மண்டேலா மிதவாதப் போக்கினைக் கடைப்பிடிக்கிறார் எனவும் தொடர்ந்து தான் போராடுவோம் எனக் கூறி பல கட்சி பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்ட PAC எனப்படும். (Pan African Congress) தீவிரமான இன்னொரு கறுப்பின மக்கள் அமைப்புமண்டேலாவை கடுமையாக எதிர்த்து வருகின்றது. அடிமட்டத்தில் PAC க்கு செல்வாக்கு அதிகரிப்பதாகவும் ANC கட்சி தொண்டர் பலர் இவ்வமைப்பில் சேரத் தொடங்கியிருப்பதாகவும் இப்போது கூறப்படுகின்றது. இவ்வமைப்பின் ஆயுதம் தாங்கிய பிரிவான அசேனியன் மக்கள் விடுதலை முன்னணி வெள்ளையர் மேல் தொடர்ச்சியான தாக்குதல்களை இப்போது மேற்கொள்ளுகின்றது.

ஒரு இறுக்கமான கட்டுக்கோப்பான போராடும் அமைப்பாக ANC இல்லாததால் அதன் தற்போதைய கட்சி அமைப்பு பலவீனமுற்று இருக்கும் நிலையில் எவ்வாறு தனது முதிய வயதில் மண்டேலா இச்சிக்கல்களை சமாளிக்கப் போகிறார் என்பது நாம் பொறுத்திருந்து அவதானிக்க வேண்டிய விடயம். எனினும் அமைதியாக வாழ விரும்பும் பெரும்பான்மை மக்களையும் தேவையான பொருளாதார அடிப்படை கட்டுமானத்தையும் வளங்களையும் தென்னாபிரிக்கா கொண்டிருப்பது ஒரு சாதகமான அம்சமாக கருதப்படுகின்றது.

எது எவ்வாறு இருந்தாலும் இத்தகைய தொல்லைகள் தீர்ந்து தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் வீசப்போகும் சுதந்திரக்காற்றை சுவாசித்து தமது முன்னைய அடக்கு முறையின் வடுக்களை மறந்து புதுவாழ்வு காண வேண்டும் என்பதே எமது விருப்பாகும்.


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
கணனி கல்வி நிலையங்களுடன்
இணைந்து நடாத்தும்

'கணனி, இலத்திரனியல் கண்காட்சி'

COMPUTER
&
ELECTRONICS EXHIBITION

மேற்படி கண்காட்சி பாடசாலை மாணவர்களினதும் பொதுமக்களினதும் நன்மை கருதி டிசம்பர் 4-ம் திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம்: ரூபா 10/-

சிறுவர்களுக்கு: ரூபா 5/-

தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி-8051)

## சிறுகதை

# ஏன் இந்த மாற்றம்?

### மலரன்னை

காலை நேரத்து இளவெயில் திறந்திருந்த கதவினூடாகவீட்டிற்குள் பட்டுத்தெறித்தது. கமலா ஆற, அமர இருந்து அன்றைய 'ஈழநாதம் வெள்ளி மஞ்சரி'யைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

''அம்மா! அம்மா!!'' பரபரப்புடன் கமலா, தாயை அழைத்தாள்.

''அம்மா! இண்டைக்கு 'விழுதுகள்' பக்கத்தில தம்பியைப்பற்றி ஆரோ எழுதி இருக்கினம்''

''என்னடி பிள்ளை அது? சத்தம் போடுறாய் அங்கை இருந்து கொண்டு. நான் இஞ்சை கிணத்தடியில குளிச்சுக் கொண்டிருக்கிறன். இஞ்சை வந்து சொல்லனடி.''

கையில் பத்திரிகையுடன் கிணற்றடிக்கு வந்தாள் கமலா.

''அம்மா! இண்டைக்கு எங்கடை தம்பி ராசனைப் பற்றிப் பேப்பரிலை வந்திருக்கு, இஞ்ச பாருங்கோ தம்பியின்ரை படமும் போட்டிருக்கு''

சொல்லியவாறே பத்திரிகையைத் தாயின் முகத்திற்கும் கிட்டவாகப் பிடித்தாள் கமலா.

''வடிவாய்ப்பிடி பிள்ளை, பாப்பம்'' சொல்லியவளின் குரல் கரகரத்தது.

''அம்மா பாத்திட்டியளெல்லோ. இனிக் குளிச்சிட்டு வந்து ஆறுதலாய் வாசியுங்கோ. நான் படிச்சிட்டு வைக்கிறன்''

கமலா போய்விட்டாள். பொன்னம்மாவிற்கு மகனின் ஞாபகம் வந்ததும் தன் நிலை மறந்தாள். மகனின் நினைவில் அமிழ்ந்து போனாள்.

பொன்னம்மா இளம் வயதிலேயே விதவையாகிவிட்டவள். தன் இரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கிவிட வேண்டுமென ஆர்வங்கொண்டாள். அவர்களுள் மூத்தவள் கமலா துணிவு மிக்கவள். இளையவன் ராசன். பயந்த சுபாவங் கொண்டவன், அவனுக்கு பொழுது சாய்ந்தால் போதும் தாயை விட்டுப் பிரிய மாட்டான். இருளென்றால் அவனுக்கு அவ்வளவு பயம். பொன்னம்மாவிற்கு இப்போதும் இருளைக் கண்டதும் மகனின் நினைவு வந்துவிடும். கண்ணீர் சிந்தத் தொடங்கிவிடுவாள். அப்பாவிச் சுபாவமுள்ள ராசன் இயக்கத்திற்குப் போவான் எனப் பொன்னம்மா கனாக்கூடக் கண்டிருக்க மாட்டாள்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து ராசன் வரும்போதே ''அம்மா!'' என்று அழைத்தவாறு வந்தான். பொன்னம்மா வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். ராசன், நாய்க்குட்டி ஒன்றை நன்றாகக் கட்டிப்பிடித்து வைத்துக்கொண்டிருந்தான்.

''அம்மா! இந்த நாய்க்குட்டியை ஆரோ றோட்டிலை கொண்டந்து விட்டிட்டினம். அது கிடந்து கத்திக் கொண்டிருந்தது. வாகனம் ஏதும் வந்தால் அடிபட்டுச் செத்துப் போயிடும் எண்டு நான் தூக்கிக் கொண்டு வந்திட்டன் பாவம்! சின்னக்குட்டி''

சொல்லியவாறு குட்டியைத் தடவிக் கொடுத்தான். பொன்னம்மாவிற்குத் தன் மகனின் செயல் எரிச்சலை உண்டு பண்ணி விட்டது.

''ஆரும் பெட்டை நாய்களை வளக்கிறது. அதுகள் குட்டிபோட அதுகளைக் கொண்டு வந்து றோட்டுகளில விடுறது. உனக்கு வேறை வேலையில்லை. இஞ்சை தூக்கிக்கொண்டு வந்திட்டாய்.உடனகொண்டு போய் எங்கையாகிலும் விட்டிட்டு வந்துகுளிச்சிப் போட்டு வீட்டுக்கை வா. சீ! ஊத்தை நாயைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு நிற்கிறாய். கொண்டோடிப் போ!''

ராசன் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டான். பிறகு அவனைச் சமாதானப் படுத்தத் தாயும் மகளும் பட்டபாடு அப்பப்பா! அவர்களுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. அவனுடைய ஜீவகாருண்யம் நிறைந்த செயல்களை எண்ணிப் பார்க்கிறாள்.

மற்றுமொரு நாள். குசினிக்குள் எலிகளின் தொல்லை அத்துமீறிவிட்டது.தொல்லை பொறுக்கமுடியாத பொன்னம்மா,ஒருஎலிப்பொறி வாங்கி வந்தாள். அந்தப் பொறியை ஏற்றி வைக்க விடமாட்டேன் என்று ராசன் அடம் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்யத் துவங்கி விட்டான். ''எலிகள் தங்களுடைய வயிற்றுப் பசியைத் தீர்க்கத்தான் குசினிக்குள்ள வருகுதுகள். அதுகளைக் கொல்லக் கூடாது'' என்று சண்டைக்கு வந்து விட்டான். பின்னர் கமலா அக்கா எலி அளைஞ்ச சாப்பாடுகளால் ஏற்படும் தீமைகளைப் பற்றி அவனுக்கு விளங்க வைத்து சமாதானப்படுத்தப் பட்டபாடு, பொன்னம்மாவின் நினைவில் அலை மோதியது.

பொன்னம்மாசிந்தித்தாள் ''எப்படி என்ரை குஞ்சுக்கு இப்படி மனமாற்றம் வந்தது? எனக்கு அவன் எண்டைக்குமே குழந்தையாய்த்தானே இருந்தவன். அவன் பெரியவனாய் வளர்ந்த மாதிரிஎனக்குத் தெரியேல்லையே? என்னெண்டு மாறினவன்?

பொன்னம்மா விடைகாண முயன்றாள். ராசன் வீட்டிற்கென்று வரும் போதெல்லாம் தாயுடன் செல்லமாக இரண்டு வார்த்தை கதைக்காமல் விடமாட்டான். அன்றொரு நாள் அவன் பொன்னம்மாவைத் தடவி விட்டு,

''அம்மா! ஏனம்மா இப்படி மெலிஞ்சு போயிருக்கிறியள். ஏன் வடிவாய்ச் சாப்பிடுறதில்லையே! அக்கா, நீயெண்டாலும் அம்மாவைக் கவனிச்சுச் சாப்பிட வையன். பார்! அம்மா சரியாய் மெலிஞ்சு போனா''

சொல்லும் போது அவனது குரல் கரகரத்தது. பொன்னம்மாவுக்கு கண்கள் குளமாகி விட்டன.

''இவ்வளவு பாச உணர்வு கொண்ட என்ரை மகன் ஏன் இப்படி ஒரு முடிவை எடுத்தவன்? எப்படி அவனால தன்ரை உணர்வுகளை மறைக்க முடியுது? ஓ!... அப்படியெண்டால் அவனுக்கு என் மேலே உள்ள பாசத்திலும் பார்க்க கூடுதலான பற்றுத் தன்ரை சொந்த மண்ணிலை இருக்குதோ!, பொன்னம்மாவின் மனம் மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியைக்கேட்டுக் கொண்டிருந்தது.

'கோட்டைப்பிரச்சினை நடந்து கொண்டிருந்தபோது ஒருநாள் ராசன் முகத்தை தொங்கப்போட்டவாறு வீட்டிற்கு வருகின்றான். வந்தவுடன் ஒருவருடனும் கதைக்காமல் தனியே இருந்துயோசித்துக் கொண்டிருந்தான். பொன்னம்மா அவனைஅணுகி

''ஏனப்பு விறைச்சமாதிரிக் குந்திக் கொண்டிருக்கிறாய்'' என்று கேட்டாள்.

''அம்மா நேற்றுச் சகடை போட்ட குண்டு கோயிலிலை விழுந்து வெடிச்சிருக்கு. என்னாடே படிக்கிற பெடியன் ஒருத்தனும் அந்தக் கோயிலுக்கை பாதுகாப்புக்காகஓடி இருக்கிறான் அவன்ரை உடம்பைப் பார்க்கேலாது. எல்லாம் எரிஞ்சுகருகிக்கிடக்குது. ஏன் தான் இப்பிடிப் போட்டுக் கொல்லுறாங்களோ''

மகனின் வாட்டத்திற்கான காரணத்தைஅறிந்து கொண்ட பொன்னம்மா,

''அவங்களுக்குத் தமிழர் எல்லாரையுமே அழிக்கிறது தானேநோக்கம்'' என்று சொல்லித் தன் மனநிலையை வெளிப்படுத்தினாள்.

அந்த நிகழ்வின்பின்அவனது செயல்களில் மாற்றம் தென்பட்டது. சிலநாட்களில் அவன் தன்னை இயக்கத்துடன் இணைத்துக்கொண்டான். ஆனால் பொன்னம்மா அதனைச் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கடைசியாய் ராசன் வீட்டிடிற்கு வந்த அன்று கமலா தான் அவனுக்குச் சோறு போட்டுக்கொடுத்தாள் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் இடையில்,

''அம்மா!முந்திநாங்கள்சின்னனாய் இருக்கைக்க நிங்கள் எனக்கும்அக்காவுக்கும்சோறு குழைச்சு உருட்டித் தாற நீங்களெல்லே? இப்பவும் நான் அதைநினைக்கிறநான் அம்மா குழைச்சுத் தாற சோறு தனி ருசி தானெண்டு'' மகன் அப்படிச் சொன்னதும் பொன்னம்மா,

''பொறுகுஞ்சு, இண்டைக்கும் நான் குழைச்சு தாறன்''

என்று சொல்லித்தானே குழைத்து உருட்டிக்கொடுத்தாள், ராசன் ஆவலுடன் வாங்கிச் சாப்பிடுவதைப்பார்த்து அவளது மனம் பூரிப்படைந்தது.

ராசன் புறப்படும்போது மழை தூறல் போடத் துவங்கிஇருந்தது பொன்னம்மாவும் கமலாவும் ஒழுங்கை வரை வந்து ராசனை வழியனுப்புவது வழக்கம். அன்றும் அவ்வாறே அவனுடன் கூட வந்து கொண்டிருந்தார்கள்.

''ஏனம்மா மழையுக்கை வாறியள் மழையிலை நனைஞ்சால் தடிமல் வரப்போகுது அக்கா! அம்மாவை மழையிலை நனைய விடாதை''

ராசன் தடுக்கத் தடுக்க இருவரும் படலையைத்தாண்டிஒழுங்கை முகப்புவரைவந்து வழியனுப்பி, அவனது உருவம் மறையும் வரை நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரது கண்களிலும் நீர் பனித்திருந்தது. இருவருமே தம் மனதுக்குள் தெய்வத்தை வேண்டிக் கொண்டனர். பொன்னமமா தன் இஷ்ட தெய்வமான முருகப்பெருமானை வேண்டிக் கொண்டாள்.

''எம்பெருமானே! என் பிள்ளைக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்துக் காப்பாற்று''

கமலா தன்குலதெய்வமான பிள்ளையாரை வேண்டினாள்

''காலத்தின் தேவையை அவனுக்கு உணர வைத்தவனும் நீயே அவனுக்கு பக்க பலமாய் இருந்து பாதுகாக்க வேண்டியவனும் நீயே''

இதுதான் கடைசிச் சந்திப்பாயிருக்குமென்று அவர்களில் எவருமே நினைத்திருக்க முடியாது. ஒருவேளை, கழுத்தில் சயனைட் குப்பியைக் கட்டியிருக்கும் ராசன் 'சாவு எந்நேரமும் என்னை அணைக்கலாம்' என்று எண்ணியிருப்பானோ? என்னவோ!

''அம்மா!என்னம்மா துலாவைப் பிடிச்சுக்கொண்டு ஈரத் தோடை அப்பிடியே நிற்கிறியள். நீங்கள் இருங்கோ. நான் அள்ளி வாத்து விடுறன்'

கூறியவாறு கமலா வந்து துலாக்கயிற்றைத் தாயிடமிருந்து வாங்கித் தண்ணீரை அள்ளி அம்மாவிற்கு வார்த்து விட்டாள். குனிந்து வார்த்த போது கமலாவின் கண்களிலிருந்தும் இரு சொட்டுக் கண்ணீர் அம்மாவின் முதுகில் விழுந்து தண்ணீருடன் சங்கமமாகியது.

---

## மணலாறு காத்த மாவீரன் அன்பு

அன்புக்கு அன்பாய் அரவணைத்து நின்றாய்
மணலாறு மண்ணிலே வரலாறு கண்டாய்
நாமத்தில் அன்பாய் தாயகத்தை காத்தாய்- இன்று
தவிக்கவோ எம்மை விட்டெங்கு சென்றாய்!

பண்பான தலைவனுக்கு அன்பாக சேர்ந்தாய்
பகைவனது படைக்கோ தீயாக வெந்தாய்
தாடியென்ற அன்பே வாடியெங்கு சென்றாய்- இன்று
மடிந்தோரின் வரிசையில் நீ கூடி நின்றாய்!

கானகத்து காவலனாய் தாயகத்தில் நின்றாய்,
கணக்கில்லா பகைவனது தலைகளையோ கொய்தாய்
மின்னலுக்கும், புயலுக்கும் முன்னணியில் சென்றாய்-இன்று
மீளாத துயரொன்றை நம்மவர்க்கு தந்தாய்!

தமிழீழத்தின் இதயத்தை இயங்கவே வைத்தாய்
இடர் தந்த படைகளுக்கு தொடரடியோ கொடுத்தாய்
பிறந்த மண்ணை முத்தமிட பறந்து நீயும் வந்தாய்
பிரபாகரன் அணிசேர மீண்டும் நீ வருவாய்!

இ. ஜே.விஜயக்கோன்

## இருப்பிளந்துபோன ஒருவனின் இருப்பு

என் வீட்டு முற்றத்தில்
ஏழெட்டுத் தென்னைமரம்
வானை உரசுவதாய்
வளையாமல்
நீள நிற்கும்

இரவுவர நிலவு வரும்
என் வாசல் தேடி
தென்னை மரங்களிடை
நிலவு விளையாடும்
என்னுடைய காற்று
பூவாசம் வீசும்
தோள் தொட்டு முகம் வருடி
என்னோடு பேசும்

என் நிலத்தை எதிரிபடை
சூழ்ந்திட்ட ஓர் நாளில்
எல்லாமே தொலைந்திற்று
மிஞ்சியதோ சோகம்
கொக்கு பூத்த
என் வயல் வெளியும்
குருவிபூத்த
என் மரக்கிளையும்
சாம்பல் பூத்த மேடாகி
சரிந்து-
மண்ணாய் போயிற்று

இவ்விரவில் இந்நேரம்
என் தென்னை மரங்கள்
இருக்கின்றனவோ
எறிகணையால் முறிந்து
எரிந்து போயினவோ . . .
நிலவு வந்து பார்த்து
நின்றழுகின்றதுவோ
என் காற்று எனைத்தேடி
அலைந்து திரிகின்றதுவோ . . .

இதயத்தைத் தொலையவிட்டு
இருப்பிழந்து வந்தேன்
இடம் பெயர்ந்த இம்மண்ணில்
எரிகின்ற நிலவும்
ஏளனமாய்
எனைத் தட்டிப்போகின்ற காற்றும்
நிச்சயமாய் சொல்லுகிறேன்
என்னுடையதல்ல

-விவேக்

## மலையகத்தில் உருவாகிவரும் நெருக்கடி

# அமைச்சர் பதவியா? மக்களுக்கான போராட்டமா? தீர்மானிக்க வேண்டிய நிலையில் தொண்டமான்

மலையகத்தில் கொந்தளிப்புகள் ஏற்படத் தொடங்கிவிட்டது மலையகத்தில் அமைதியின்மையும், பதட்டமும், பரவலாக உணரப்படத் தொடங்கிவிட்டன. மலையகத்தில் அமைதியைப் பேண நாம் 'அயராது முயலுகின்றோம்'' என மார்பு தட்டிப் பேசிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 'இன்று' இந்த அமைதியற்ற நிலைக்கு நாம் காரணகர்த்தாக்கள் அல்ல என்று வெளிப்படையாகக் கூற வேண்டிய அளவுக்கு மலையகத்தில் கொந்தளிப்புக்கள் ஆங்காங்கே ஏற்படத் தொடங்கிவிட்டது- இந்தச் சூழ்நிலையில் இருந்து விடுபட முடியாத ஒரு நிலையிலேயே இ.தொ.கா. - ஐ.தே.க உறவில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அமைச்சரும் இ தொ, கா தலைவருமான தொண்டமான் வழமையான தனது 'ஸ்ரண்ட்' நடவடிக்கை போலவே இன்றைய சூழலையும் கையாள முற்படுவாரேயானால் மலையகத்தில் அவரது அரசியல் தலைமைத்துவம் காலாவதியாகிப் போகும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

மலையகத்தில் இன்றைய அமைதியற்ற நிலைக்கு மிக முக்கியமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். முதலாவதாக மலையகத்தின் முதுகெலும்பாகவுள்ள பெருந்தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டதும் அதனால் எழுந்துள்ள நெருக்கடிகளும் இரண்டாவதாக காரணமற்றவகையில் சந்தேகத்தின் பேரில் பொலிசாராலும் ஏனைய படையினராலும் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் மற்றும்கைதுகள் இவை தவிர இன்னும் தேசிய அடையாள அட்டை வினியோகிப்பதில் அசமந்தப் போக்குகள், சிங்களக் குடியேற்றங்களால் நடைபெறும் காணி அபகரிப்புகள் காலாவதியாகிப் போன சிறிமா. -சாத்திரி உடன்படிக்கையின் கீழ் இந்தியா திரும்ப வேண்டியவர்களின் பிரச்சினைகள் என்பன போன்ற பல்வேறுபட்ட சிக்கல்கள் இருக்கின்ற போதும் கூட மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களும் இ.தொ.கா தொடர்ந்தும் அரசுடன் உறவு கொண்டாடுவதில் பலத்த சங்கடங்களை தோற்றுவித்துள்ளது எனலாம்

எழுபதுகளில் மக்கள்பெருந் தோட்ட அபிவிருத்தி சபை (ஜனவசம) மற்றும் அரச பெருந்தோட்ட யாக்கம் என்ற பெயர்களில் அரசுக்கு உடைமையாக்கப்பட்ட பெருந்தோட்டங்கள் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் உலக வங்கியின் சிபார்சுகளுக்கு அமைவாக தனியார் மயமாக்கப்பட்டன ஏனைய பல கூட்டுத்தாபனங்கள், போக்குவரத்துச்சபை போன்றன 'மக்கள் மயம்' என்ற போர்வையின் கீழ் தனியார் மயப்படுத்தப்பட்டது போலவே பெருந்தோட்டங்களும்தனியார்மயப்படுத்தப்படுவதாகசிறிலங்கா அரசாங்கம் கூறிக்கொள்கிறது. எனினும் போக்குவரத்துச்சபை போன்றன மக்கள மயப்படுத்தப்பட்ட போது ஊழியர்களுக்கு என்று கணிசமான அளவு பங்குகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் தோட்டத்துறையில் அவ்வாறு இடம்பெறவில்லை. தோட்டங்களின் முகாமைத்துவத்தை தனியார் கம்பனிகளிடம் கையளித்துள்ள அரசு அத்துடன் தனது கடமை முடிந்தது என்றே கருதுகின்றது. ஆனால் தோட்டத்துறையில் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான உறவு வேலை கொடுப்போருக்கும் கொள்வோருக்கும் இடையிலான உறவாக மட்டும் இல்லை. தோட்ட நிர்வாகங்களே தொழிலாளர்களின் குடியிருப்பு, சுகாதார, மருத்துவ, மற்றும் சமூகநல விடயங்களில் கவனம் செலுத்திய நிலை இருந்ததோடு தோட்டப்புற மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்காலம் தொடர்பாகவும் அக்கறை காட்டிய நிலை இருந்தது. எனினும் தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற கம்பனிகள் தோட்டங்களிலிருந்து லாபத்தை ஈட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். இதனால் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு உட்பட மற்றும் சமூக நல விடயங்களில் அக்கறை காட்ட மறுக்கின்றது இந்த நிலை தோட்டங்களில் அமைதியின்மையை தோற்றுவிப்பதோடு வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கும் வழி வகுக்கின்றது.

மேலும் வேலை நாள் குறைப்பு, நாட் சம்பளம்குறைப்பு. மேலதிக வேலை செய்யப் பணிப்பு, அடிமைத்தனமான வேலை நிபந்தனைகள், சலுகைகள் பறிப்பு. இந்தியக்கடவுச் சீட்டு பெற்றோருக்கு தொழில் மறுப்பு. இளைஞர்களை வேலைக்கு பதிவதில் இழுத்தடிப்பு, தொழிற்சங்க உரிமை பறிப்பு என்றவாறாக தனியார் கம்பனிகள் மேற்கொள்ளும் கெடுபிடி நடவடிக்கைகள் மலையக மக்களிடையே பெரும் வெறுப்பையும் கோபத்தையும் கிளறச் செய்துள்ளது.

இந்த நிலையில் தான் தோட்டத் தொழிற்துறை தனியார் மயமாக்கப்பட்டமை தொழிலாளர்களுக்கு ஏமாற்றம் தரும் ஒரு நிகழ்வாக அமைந்துவிட்டதாக தொழிற்சங்கங்கள் பகிரங்கமாகக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தனியார் மயமாக்கப்பட்டால் தொழிலாளர்களின் வாழ்வில் 'பாலும் தேனும் பாய்ந்தோடும்'' என்று கற்பனைகளை ஊட்டிய இ தொ காவிற்கு இன்றைய நிலை பெரும் சங்கடங்களைத் தோற்றுவித்துள்ளது.

## இளையவன்

தனியார் மயமாக்கலை வெளிப்படையாகவே ஆதரித்த இ.தொ.காவும், ஐ தே. கவின் இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கமும் இன்று தொழிலாளர்களின் கேளவிகளுக்கு பதில் கூற முடியாத சங்கடமான நிலைமை ஏற்பட்டுள்ளது. தோட்டத்துறையின் இன்றைய நெருக்கடி நிலை குறித்து பல்வேறு தொழிற் சங்கங்களுக்கும் இடையே பல்வேறுபட்ட அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன எனினும் தனியார் கம்பனிகளின் நிர்வாகப் போக்கு குறித்து அதிருப்தியும், இன ரீதியாக மலையக மக்கள் ஒடுக்கப்பட்டு வருவதான உணர்வும் பொதுவாக இருக்கின்றன. இந்த நிலையில்தான்தோட்ட நிர்வாகங்களை நிர்வகிப்பதற்காக தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லையை நீடிக்க வேண்டாமென்றும், தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்படாத 52 தோட்டங்களையும் கம்பனிகளுக்கு கையளிக்க வேண்டாமென்றும் இ. தொ. கா வலியுறுத்துகின்றது.

தோட்ட நிர்வாகங்களை பொறுப்பேற்றுள்ள தனியார் கம்பனிகளை பொறுத்து தோட்டத்துறை இலாபத்தில் இயங்கினால் மட்டுமே தம்மால் கொண்டு நடத்த இயலும் எனத் தெரிவிக்கின்றன. நுவரெலியாமாவட்ட தோட்டத்துரைமார் சங்கத்தின்வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஹேலீஸ் தனியார் கம்பனியின் தலைவர் மகேந்திர அமரசூரியாவின் கூற்று இதற்கு ஒருவகை மாதிரியாகும். ''தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் தொடர்பாக மாற்றங்கள் ஏற்படாது விட்டால் தேயிலைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருமே பிரச்சினையில் அமிழ்ந்து போக நேரிடும்'' என்று அவர் எச்சரிக்கின்றார்.

இவ்வாறு தோட்டத்துறையில் தொழிலாளர்கள் அனுபவிக்கும் நெருக்கடிகள் ஒரு புறமிருக்க இனரீதியாகவும் பாதிக்கப்படும் -ஒதுக்கப்படும் சம்பவங்களுக்கும் குறைவில்லை. இதற்கு வத்துமுல்ல பகுதி மக்களின் வாழ்க்கை ஒரு உதாரணம். நுவரெலியா மற்றும் வலப்பனை பிரதேசங்களில் குறிப்பாக மலையக மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அண்மைக்காலங்களில் சிங்கள குடியேற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் வத்துமுல்ல தோட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டங்கள் தனியார் மயமாக்கப்படுவதற்கு முன்பு இத்தோட்டம் சிங்கள இனத்தவர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. வத்துமுல்ல நகரமயமாக்கப்பட்டதை தொடர்ந்து சில தோட்டங்கள் மூடப்பட்டன. இருக்கின்ற தோட்டங்களிலும் நாட்டுப்புற சிங்களவருக்கே வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. கவனிப்பாரற்ற சில தோட்டங்கள் காடுகளாக மாறி வருகிறது இவற்றினால் காட்டுப் பிரதேசத்தில் வாழும் உர்ணவுக்கு இந்தப் பகுதியின் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் இது குறித்து அரசியல் வாதிகளிடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளும் செவிடன் காதில ஊதிய சங்காகவே உள்ளன.

இவ்வாறான நிலையில் தான் கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடைபெறும் தேடுதல் நடவடிக்கைகள் உட்பட பல் வேறு சம்பவங்களின் போதும் மலையக இளைஞர்கள் பலரும் சந்தேகத்தின் பேரில் கைதாவது தொடர்கிறது இத்தகைய கைதுகள் நிறுத்தப்படவேண்டும் என்று காலத்திற்கு காலம் விடப்பட்ட கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காக போய்க் கொண்டிருக்கிறது. வடக்கு - கிழக்கு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்பதன் பேரில் கைது செய்யப்பட்ட ஊவா மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்களில் பலரும் பல வருடங்களாகியும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டதாகவோ நீதிமன்றங்களின் முன்பு நிறுத்தப்பட்டதாகவோ இதுவரை இல்லை. இதுதவிர யே. வி. பி ஒடுக்கு நடவடிக்கைகளின் போதும் மலையக இளைஞர்கள் பலரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் இவர்களின் விடுதலை குறித்தும் இதுவரை ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெற்றதாக இல்லை. அதேவேளை மலையகத்தில் 'பயங்கரவாத சிக்கெடுப்பிக்கென' ஒரு அமைப்பு செயற்படத் தொடங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மலையகத்தில் இன்று நடைபெறும் சம்பவங்கள் தோட்டத்துறையை மட்டுமல்ல மலையக மக்கள் சமூகத்தையே சிதறடிக்க வைப்பதையே உள்நோக்கமாகக் கொண்டுள்ளன. தோட்டங்களை விட்டு இம் மக்கள் இடம்பெயர வைப்பதற்கும் எதிர்கால அரசியல் பலமிழந்து நிற்பதற்கு வழிவகுப்பதுமே இன்றைய சம்பவங்களின் உண்மை நோக்கமாகும். தோட்டத்துறையில் இன்று நிலவும் நெருக்கடியானது தனியே பொருளாதார இலாப நட்டங்களுடன் மட்டும் தொடர்புடையதல்ல. அது மலையக மக்களின் எதிர்கால நலன்களுடனும் தொடர்புடையதாகும். இந்நிலையானது அமைச்சர் தொண்டமானும், இ. தொ. காவும் உருவாகியுள்ள நெருக்கடியை உணர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் மலையக மக்களின் அரசியல் தலைமைத்துவம் இ தொ காவிடம் இருந்து கைநளுவிப் போவது தவிர்க்க முடியாதாகிவிடும்.

---

# அமெரிக்க இராணுவத்தில்

டத் தகுதியற்றவர்கள் என்ற எண்ணக் கரு ஒரு காலத்தில் வலுப்பெற்றிருந்தது. 2ஆம் உலக யுத்தத்தில் கறுப்பினத்தவர் போர்க்காலச் சேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டனர். இக்கருத்து இப்போது பொய்த்து விட்டது.

**O மகப்பேறும் குழந்தை வளர்ப்பும்அமெரிக்க இராணுவத்தில்** எதிர்த்தாக்கங்களையும், விளைவுகளையும் ஏற்படுத்துவதாகவும், அப்பேற்பட்ட பெண்களை எப்படி இராணுவத்தில் அமர்த்த முடியும் என்றும் கேட்கப்படுகிறது. பெண்களின் பிரதான பணி குழந்தை வளர்ப்பு என்ற சிந்தனையின் வெளிப்பாடே இது. குழந்தைகளைப் பிரிந்து இராணுவ முகாம்களில்வாழும் தந்தையரைப் பற்றி எவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. 1978க்கு முன் கர்ப்பிணி என்றால் உடனே இராணுவத்தை விட்டு விலக்கும் விதி நடைமுறையில் இருந்தது. ஆனால், இப்போது பெணகளுக்கு ஆறு வார மகப்பேற்று விடுப்பு வழங்கப்படுகிறது. பெண்கள் சொல்லாமல் கொள்ளாமல் விடுப்பில் நிற்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால், 2ஆம் உலக யுத்தத் தரவுகளின் படி, அமெரிக்கப்பாதுகாப்புப் படைகளில் பெண்களை விட ஆண்கள் அதிக நாள்கள் விடுப்பில் நின்றதாகவும், போதை வஸ்துப் பழக்கங்களில் ஈடுபட்டதாகவும், குற்றச் செயல்கள் புரிந்ததாகவும் அறிய முடிகிறது.

மாகிறட் மீட் என்ற மானிடவியலாளரை மேற்கோள் காட்டி, இனப்பெருக்கத்துக்குப் பெண்கள் அவசியம். அதனால் யுத்த முனைகளில் பெண்கள் நேரடியாகப் பங்கெடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது. அப்படியாயின் அமெரிக்க இராணுவத்தில் உள்ள பெண்களின் எண்ணிக்கை அமெரிக்கஇனப்பெருக்கத்தை வீழ்ச்சி அடையச் செய்யுமா என்ற எதிர்வாதம் முன்வைக்கப்படுகிறது. இன்றைய நவீன யுத்தங்கள்போர்முனையோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. அவை நாடுகள் அல்லது கண்டங்கள் தழுவியவை என்பது குறிப்பிடத் தக்கது.

**O இராணுவத்தில் பெண்களைச் சேர்த்துக் கொள்வதால்** பாலியல் விவகாரங்கள் அதிகரிக்கும். இதனால் பாதுகாப்புப் படைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்குலையும். இவ்வாறான சூழ்நிலையில் படைகளில் பெண்களை அனுமதிக்கலாமா, கூடாதா என்ற சர்ச்சையும் தலைதூக்கியுள்ளது. அமெரிக்காவின் மினிற்மான் அணு ஏவுகணை நிலையத்தில்உள்ள நில அறைகளில் ஆணும் பெண்ணுமாக இருவர் 24 மணிநேரம் பணிசெய்கிறார்கள். பாலியல் சம்பந்தமான எந்தவித அறிக்கைகளும் இதுவரை அங்கிருந்து கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இராணுவத்தில் பெண்களைச் சேர்ப்பது அமெரிக்காவின் பிம்பத்துக்கு இழுக்கு என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது. இது வரப்போவதைக் குறித்து, முன்கூட்டியே தீர்மானிக்கும் நிச்சயமில்லாத முடிவாகும். கனடா, நோர்வே டென்மார்க் ஆகிய நாடுகள் பாதுகாப்புப்படைகளில்ஆண்-பெண் வித்தியாசத்தை நீக்குவதற்கான வழிமுறைகளை அமுல்படுத்தி வருகின்றன. அமெரிக்காவில் மாத்திரம் இந்த நிலை.

விமானப் படை பிரதி சீவ்-ஒவ் - ஸ்ராவ் லெப். ஜெனரல் தொமஸ் ஏ. ஹிக்கி இராணுவ சேவைகள் குழு முன்னிலையில் இவ்வாறு கூறுகிறார். ''இது ஒரு தேசியப் பிரச்சினை. பெண்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்கு நாம் தயார் என்றால் அமெரிக்க விமானப்படையில் போர் முனையில் அவர்களால் செய்ய முடியாதது எதுவுமில்லை. உடல் ரீதியான பொருத்தப்பாடுஅவர்களுக்கு உள்ளது உளவளமும் அவர்களுக்கு உள்ளது. அவர்களை யுத்த முனைக்கு அனுப்புவது என்றால் சட்டத்தைத் திருத்துங்கள். விமானப்படை அதனைச்செய்யும்.''

அமெரிக்காவில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பீடு பெண்கள் சண்டையில் ஈடுபடுவதை தடுக்கும் சட்டம் குறித்த பொது மக்களின் கருத்தைத் தெரியப்படுத்துகின்றது. நியூயோர்க் ரயிம்ஸ் மற்றும் சி. பி. எஸ் செய்தி நிறுவனம் ஜனவரி 13 - 15, 190 இல் எடுத்த கருத்துக் கணிப்பின்படி, பெண்கள் சண்டையில் நேரடியாகப் பங்கு கொள்வதை 72 விகிதம் பேர் ஆதரித்துள்ளனர் 26 விகிதத்தினர் அதை விரும்பவில்லை. 2 விகிதமானோர் அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்கவில்லை.

பலன் கிட்டுமா?

# பூநகரியில் விளைந்த பெரும் நாசம்; ஒரு கொழும்பு பத்திரிகையின் பார்வையில்!

பூநகரியில் ஏற்பட்ட நாசத்தில் தமது உயிரையே தியாகம் செய்த தேசப்பற்றுமிக்க இளைஞரின் மரணம் குறித்து நாடு துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இந்தவேளையில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள யாழ்ப்பாணத் தீபகற்பம் விழாக்கோலம் பூண்டுள்ளது. விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ''வீரவணக்கம்'' கொண்டாட்டங்கள் மத்தியிலும் ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றிய தனது உயர் படை அணியினர் சிலரின் வீரத்தை மெச்சிஅவர்களுக்கு விருதுகள் வழங்கிக்கொண்டிருந்தார். நவம்பர் 11ஆம் திகதி காலை 1.30 மணியளவில் ஆரம்பமான பூநகரி முகாம் தாக்குதலுக்கு பிரபாகரன் சூட்டிய இரகசியக் குறியீட்டுப் பெயர் தான் ''ஒப்பரேசன்தவளை''

இப்போது கிளாலி என்று பிரசித்தமாயிருக்கும்வழியாக யாழ்ப்பாணக் கடல் நீர் ஏரி மீது தங்குதடையின்றிப் புலிப் படையினரும், சாதாரணமக்களும் பாதுகாப்பான படகுப் பயணம் மேற்கொள்ளவே புலிகளின் பூநகரி முகாம் தாக்குதல் நடவடிக்கை. இது சம்பந்தமான பிரபாகரனின் உறுதிமொழியை யாழ்ப்பாணத்தில் சொற்ப மாதங்களுக்கு முன்பே பிரசாரம்செய்தார்கள். இதுவே புலிகளின் பிரசாரத்தின் பிரதான இலக்காக இருந்தது.

கிளாலியின் முக்கியத்துவம் தான் அதன்மீது சிறிலங்கா இராணுவம்படையை நடத்தி ''ஒப்பரேசன் யாழ்தேவி''யை மேற்கொள்ளத் தூண்டியது. கிளாலி நோக்கி முன்னேறிய படையினர் இராணுவத்தினரின் இழப்புகள் மத்தியிலும் அங்குதரித்திருக்கலாம் இராணுவம் கிளாலியில்நிலைகொண்டிருந்தால்அந்தஇடத்தின்இராணுவகேந்திரமுக்கியத்துவம்,தொடர்புஇணைப்பு, முக்கிய நடமாட்டம், போக்குவரத்து வழி ஆகியவற்றைப் புலிகளுக்கு எட்டாமல் தடுத்திருக்கலாம். வன்னி-யாழ்ப்பாணத் தீபகற்பத் தொடர்புகளுக்கெல்லாம் புலிகள் சுதந்திரமாகப் பாவிக்கும் ஒரேயொரு வழி கிளாலியாகும். இது வடக்கை மையமாகக் கொண்ட புலிகளின் சிந்தனைக்கு அவசியமானது

இராணுவம் கிளாலியைப் பிடிக்கத்தவறியது. அதனால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த இடத்தைப் புலிகள் தம்வசம் வைத்துக்கொண்டு, சிறந்த இந்த இடத்தை ''ஒப்பரேசன் தவளை'' தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ளும் வகையில் முக்கிய தாக்குதல்தளமாகப் பாவித்தனர்.

பின்புறத்தில் இராணுவம் கிளாலியைத் தக்கவைத்து, யாழ் கடல் நீர் ஏரியைப் புலிகள் பாவிக்காமல் தடுத்திருந்தால் விடுதலைப் புலிகள் வடக்கிலும் - தெற்கிலும் இருந்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்து இருக்கலாம்.

கடந்த வாரம் தொடக்கம் பாதுகாப்பு படைகள் பூநகரியில் தமது நிலைகளை மீள அமைத்துவரும் வேளையில் கிளாலியூடான படகுப் போக்குவரத்து மீண்டும் தொடங்கியுள்ளது. புலிகளின் படகுகள் மீது சிறிலங்கா விமானப் படை விமானங்கள் தாக்குதலை நடாத்தி வருவதும் உண்மைதான்.ஆனால்தரைப் படையினதும் கடற்படையினதும் உதவி எதுவுமின்றி நடாத்தப்படும் இத்தாக்குதல்கள் ஒரு வரையறைக்கு உட்பட்டவையாகவே உள்ளன.

''ஒப்பரேசன்தவளை''யை செயற்படுத்த பிரபாகரன் தனது பல்தரப்பட்ட உறுப்பினர்களையும் இணைத்துள்ளார். பெரும்தொகையானவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது. மேலும் சாள்ஸ் அன்ரனி விசேட படை அணி, கடற் கரும்புலிகள் (கடற்புலிகளிலிருந்து கடற் சண்டைக்கும் கடல் நீரேரிச் சண்டைக்கும் என பெறப்பட்ட புதிய ''கொமோண்டோ'' அணி) கரும் புலிகள், பெண்கள்அணி என்பன. ஏறத்தாழ 2000 பேருக்குமேல் தாக்குதலுக்கென 28 நாள் ஆனையிறவுப் போருக்குப்பின் பெருந்தொகையில் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் ஆரம்பிப்பதற்கு ஒரு சில மணிநேரத்திற்கு முன்னர் புலனாய்வு துறையினரால் இராணுவ உயர் அதிகாரிகள் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தனர்.

பூநகரி பிரதேசத்தின் 33 சதுர கிலோ மீற்றர் பரப்பில் அமைந்திருந்த இப்பாதுகாப்புப்படை வலயத்தில் இராணுவத்தினரையும் கடற்படையையும் கொண்டு இக்கூட்டுத்தளம்அமைந்திருந்தது இக்கூட்டுத்தளத்தின் மேற்கு முனையில் உள்ள கௌதாரி முனையில் தரையிறங்கும் பகுதி அமைந்திருந்தது.இங்கிருந்துதான் விநியோகமும், துருப்புகள் இறக்கமும் மேற்கொள்ளப்பட்டது

இப்பகுதியுடன் ஒடுங்கிய தரைப்பரப்புடன் இணைக்கப்பட்டதாக நாகதேவன் துறை கடற்படைத்தளம் அமைந்திருந்தது. தாக்குதல் நடந்தஇரவு கடற்படையினர் நாகதேவன்துறையிலும் சிலர் அதற்கு 50மீற்றர் தொலைவிலிருந்த படகுகள் கட்டப்பட்டிருந்த மேடையிலும் தங்கியிருந்தனர். இவர்களுக்கும் ஆனையிறவில் தங்கியிருக்கும் கடற்படையினருக்கும் இடையில் தொலைத் தொடர்பு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இதன் மூலம் இரு முகாம்களிலுள்ள கடற்படையினருக்கும் இடையே ஒழுங்கான தொடர்புகள் இருந்து வந்தன.

மேலும் தென்கிழக்கு பகுதியில் இருந்த தளத்தில் பூநகரி நகரப்பக்கத்தில் முதலாவது சிறிலங்கா இலகு காலாட் படையணியின் தலைமை நிலையமும் அதற்கு வெளிப்புறமாக 3-வது கஜபா படையணியும் நிலை கொண்டிருந்தன. மேலும் இப்பகுதியில் ஒரு கடற்படை அணியும் இருந்தது.

கடற்படையினரைத் தவிர, இரண்டு படையணிகள், பல தரப்பட்ட படைப்பிரிவுகள் - கவசப்படையணி, ஆட்லறி படைப்பிரிவு, இராணுவ சைகைப்பிரிவு, விநியோகப் பிரிவு, மின்சார, இயந்திரவியல் பொறியியலாளர், தேசிய பாதுகாப்பு படைப்பிரிவு - என்பன நிலை கொண்டிருந்தன.

''ஒப்பரேஷன் தவளை'' நடவடிக்கையின் போது பெருமளவு படையினரைக் காவு கொடுத்து மூர்க்கத்தனமான அத்தாக்குதலை எதிர்கொண்டு படையினர் போரிட்டனர். மேலதிக துருப்புகள் வந்து சேர்வதில் கடினமான நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து உணவு. மருத்துவம் மற்றும் குடிநீர் வசதிகள் கூட இன்றி படையினர் கஷ்டப்பட நேர்ந்துள்ளது. மிகக் கடினமான தாக்குதல் மத்தியிலும், சாவின் விளிம்பு வரை சென்று போரிட வேண்டி இருந்தது.

பூநகரியில் இடம்பெற்ற அனர்த்தம் தொடர்பாக மேலதிக சில விபரங்கள் சண்டே ரைம்சிற்கு கிடைத்துள்ளது. மனதை நெருடும் சம்பவங்கள் நாகதேவன் துறை கடற்படை முகாமில் ஏற்பட்டன

கடற்புலிகளின் மிதப்புஒன்று வந்து மோதி கடற்படையின் ராடர் நிலையம் ஒன்றையும், தொலைத் தொடர்பு கோபுரத்தையும் சேதப்படுத்தியது. இராணுவத்தின் முக்கிய நிலைகள் மீதும், கரைக்குச் சமீபமாக இருந்த உணவு வழங்கும் நிலைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது கடற்படையினர் திருப்பித் தாக்கினர். புலிகள் மேலதிக ஆளணியினருக்கு அழைப்பு விடுத்தபடியே கடற்படையினரின் நிலைகள் மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினார்கள்.

தொலைபேசி இயங்கிக் கொண்டிருந்தது. ஆனையிறவு முகாமிலிருந்து மேலதிக கடற்படையினரை ஸ்தலத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்த கடற்படையினர் தொடர்ந்தும் தாக்குதல் நடாத்திக் கொண்டிருந்தனர். ஆனால் நேரம் அதிகாலையை நெருங்கத் தொடங்கிய போது கடற்படை பெரும் நெருக்கடியை சந்தித்தது.பலரும் சாயப்படுத்தப்பட்டனர்.சிலர் கொல்லப்பட்டும் விட்டனர். மிகுதியாக இருந்தவர்களுக்கு தாம் வெற்றி கொள்ளப்பட்டு விடலாம் என்று அச்சம் தோன்றியது.

துப்பாக்கி முனை சிவக்கும் நிலையை எய்திவிட்டால், எவரும் உதவியை அல்லது மேலதிக பலத்தை எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் அனைத்தும் இழந்து உற்சாகமற்ற இருண்ட நிலை தோன்றும் போது தேசிய கௌரவம், பயிற்சி, ஆர்வம் அனைத்தையும் மறந்து ஆபத்தைத் தவிர்க்கவும் அபாயத்திலிருந்து விடுபடுவதும் முதலிடம் பெறுவதுஉண்மை. இதனையே எமது படையினர் எதிர் கொண்டனர். இந்தப் பகுதி அதனை தாராளமாக விளக்குகிறது.

காயம்பட்டு விழுபவர்கள் சாத்தியமான அனைத்தையும் நாசமாக்கிவிட்டு ஏனையோரை உடனடியாக வெளியேறத் தூண்டினர். ஆனால் எதிர்த்தாக்குதல் நடாத்திக் கொண்டிருந்தவர்கள் அவ்வாறுசெய்வதற்கு அவர்களது இதயம் இடம் கொடுப்பதாக இல்லை. அவர்கள் மேலும் சண்டையிடவே விரும்பினார்கள். மேலும் சிலர் காயமுற்றதைத் தொடர்ந்து காயமுற்றவர்களின் வேண்டுதல் நிறைவேறியது. தொலைத் தொடர்பு சாதனங்கள் சிலவற்றை நாசப்படுத்திய படையினர், தொலைபேசி மூலம் ஆனையிறவு முகாமுக்கு நிலைமையைத்தெளிவுபடுத்தினார்கள். எதிரிகளின் கரங்களில் சிக்க நேரிட்டால் தம்மைத் தாமே மாய்த்துக் கொள்வதற்குவசதியாகதலா ஒவ்வொரு கைக்குண்டுகளை தந்து விட்டு தப்பிக்கொள்ளக் கூடிய சகலரையும் வெளியேறுமாறு காயம்பட்டவர்கள் தூண்டினார்கள். இதன் பின்னர்தான் வெள்ளிக்கிழமை இரவின் அந்த நெருக்கடியின் உச்சம் நிறைவேறியது. காயம்பட்டவர்களை விட்டுவிட்டு ஏனையோர் விரைவாக வெளியேறினர்.

நாகதேவன் துறையிலிருந்த 42 பேர் கழுத்தளவு நீரில் இறங்கி ஆனையிறவை நோக்கி சென்றனர். முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி குஞ்சுப்பரந்தனுக்கு சமீபமாக கடற்படையின் ஒரு அணி அவர்களை எதிர்கொண்டு ஆனையிறவுக்கு அழைத்துச் சென்றது. அவர்கள் அங்கிருந்து பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டனர், அங்கு கடற்படைத் தளபதி மொகான் சமரசேகராவைச் சந்தித்து அவர்கள் நிலைமையை எடுத்து விளக்கினர்.

பூநகரியில் இராணுவ நிலைகள் கொத்துக் கொத்தாக அமைக்கப்பட்ட தகரக்கொட்டைகளில் அமைந்திருந்தன இவை நெல்வயல்களுக்கு மத்தியிலும் பனை மரங்களுக்கு இடையேயும் அமைக்கப்பட்டிருந்தன. முன்னணிப் பாதுகாப்பு அரண்களுக்கு இடையிலான இடைத்தூரம் மிக அதிகமாகவே இருந்தது.

ஆனால் ஒரு உண்மை இத்தாக்குதலின் பின்னர் தான் வெளிச்சத்துக்கு வந்தது. அதாவது புலிகள் தாக்குதல் நடப்பதற்கு பல மணி நேரத்திற்கு முன்பாகவே முகாமின் பகுதிகளுக்குள் ஊடுருவிவிட்டனர் என்பதுவே அதுவாகும். இராணுவ நிலைகளில் இருந்தோர் தாம் காயமடைவதற்கு அல்லது கொல்லப்படுவதற்கு அல்லது தப்பியோடுவதற்கு முதற் களம் வரையும் இந்த ஊடுருவல் பற்றி எதுவும் அறியாதோராகவே இருந்துள்ளனர்.

முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் மீது றொக்கட் பொருத்தப்பட்ட கைக்குண்டுகளால் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து காவலரண்களிலிருந்து வெளியேறி பின்வாங்க முற்பட்ட இராணுவத்தினர் மீது பின்புறமிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு இருப்பதை இப்போது கிடைக்கும் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. நடைமுறையில் ஒவ்வொரு முன்னணிக் காவலரணும் இரு நிலைகளில் இருந்தும் தாக்குதலுக்கு இலக்காகின.

சூடுபட்டு இறந்த படையினரின் ஆயுதங்களையும், உடல்களையும் எடுத்துக்கொண்டு புலிகள் முகாமின் மத்தியை நோக்கி முன்னேறினர் சிறிலங்கா இலகு காலாட் படையின் தலைமையகத்திற்கும் புலிகள் இவ்வாறாக சில தடவை சென்றிருந்தனர். தாக்குதல் நடப்பதற்கு முன்பாகவே புலிகள் இவ்வாறு ஊடுருவி விட்டனர். திடீரெனப் புலிகள் தாக்குதல் நடத்தியதும் இழப்பு மிக அதிகமாகியது. படையினரில் சிலர் இறந்தவர்களின் உடலோடு உட்புகுந்தவர்களும் படையினரே என்று எண்ணிக் கொண்டிருந்தனர். ஏனெனில் அவர்களது உடையும் அத்தகையதாகவே இருந்தது.

காலை விடிந்த போது புலிகள் சிறிதளவு எதிர்ப்பையே சந்தித்தனர். தொலைத் தொடர்பு உபகரணங்களை அழித்துவிட்டு, காலாட் படையின் கட்டளையிடும் அதிகாரியான லெப். கேணல் ரஞ்சன் சில்வா தமது படையினர் சிலருடன் இடத்தை விட்டு மாறியிருந்தார். அதன் பின்னர் அவர் படையினரை மீள ஒழுங்கு சேர்க்க முற்பட்டார். அதனிடையில் 3-வது கஜபா படையணியின் பொறுப்பதிகாரி மேஜர் ஹேமபாலா கொல்லப்பட்டு விட்டார். கஜபா அணியினர் பின்னர் சேர்ந்து கொண்டனர். எல்லாரையும் இணைத்துக்கொண்ட லெப். கேணல் ரஞ்சன் சில்வா இறுதிவரை எதிர்ப்பதற்கு முடிவு செய்தார்.

லெப். கேணல் ரஞ்சன் சில்வா பின்னர் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவினால் கேணலாக பதவி உயர்த்தப்பட்டார். இது லெப். கேணல் மட்டத்தில் இருந்த ஏனைய அதிகாரிகளிடம் சினத்தை ஊட்டியுள்ளது. அவர்கள் தாம் புறக்கணிக்கப்பட்டதாக கருதுகின்றனர்.

பூநகரித் தாக்குதலையடுத்து இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா மிகவும் கோபமடைந்தவராகவும், குழம்பிப் போயிருப்பவராகவும் காணப்படுகின்றார். ''படையினரில் 400 பேர் ஒரே நேரத்தில் உயிரிழந்திருப்பது பற்றி உணருவதே கடினமாயிருக்கின்றது. அதையும் விட இரண்டு டாங்கிகளை அவர்கள் கைப்பற்றிச் சென்றிருப்பதை நம்புவதே கஷ்டமாக இருக்கிறது'' இவ்வாறு இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா தமது நெருங்கிய சகாக்களிடம் கூறிவருகின்றார். ''கனரக ஆயுதப் பிரிவிலிருந்து மேலே வந்தவன் என்ற வகையில் நான் இதனையிட்டு மிகவும் வெட்கப்படுகின்றேன்'' எனவும் தெரிவித்துள்ளார்.

அரசுத்தலைவர்களை பொறுத்த வரையில், பூநகரி அனர்த்தத்தை தொடர்ந்து வியாழன் காலை முதல் மிகவும் கவனமாக அவதானித்தவர்கள் மீட்பு நடவடிக்கை எதுவும் இடம்பெறாததைக் கண்டு விசாரிக்கத் தொடங்கினார்கள். இந்த அவதானிப்பு உச்சம் பெற்றபோது உயர்மட்டத்தை சேர்ந்த சிலர் அத்தகைய நடவடிக்கையை கைவிடுவதற்கே விரும்பினர். நம்பமுடியாமல் இருந்தாலும் அது உண்மை.

மாலைதீவு ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்ட பின்னர் அப்போதுதான் நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கரமசிங்க உடனடியாக நிலைமையை மதிப்பீடு செய்து கொண்டு நடவடிக்கைகளில் இறங்கினார். அவரது பணிப்பின் பேரில் பாதுகாப்பு செயலாளர் ஹமில்டன் வணசிங்கா வவுனியாவுக்கு பறந்தார் பலாலியிலிருந்து முப்படைத் தளபதிகளும் பறந்து வந்து வவுனியாவில் அவரைச் சந்தித்தனர். இந்த உயர்மட்ட மாநாட்டில் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் பற்றிய பிரதமரின் கடுமையான உத்தரவு தெரிவிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக திட்டமிட்டு உடனடியாக செயற்படும்படி உயர்பீடத்தினர் பணிக்கப்பட்டனர். ஜெனரல் ஹமில்டன் வணசிங்க இக்கூட்டஅறிக்கையுடன் கொழும்பு திரும்பிச் செல்ல முப்படைத் தளபதிகளும் பலாலிக்கு விரைந்தனர். முப்படைத் தளபதிகளும் இணைந்து பெரிய அளவில் திட்டமிட்டு மீட்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது தாக்குதல் நடைபெற்று 36 மணிநேரம் கடந்து விட்டிருந்தது.

கொழும்பில் நிலைமை வேறு விதமாகி இருந்தது. பூநகரி அனர்த்தம் பற்றிய செய்திகள் பரவத் தொடங்கியதும் செய்தித்துறைப்பணிப்பாளர் கலாநிதி சுனந்த மத்தும பண்டார செய்தித் தணிக்கையை உடன் அமுல்படுத்தும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு சிபார்சு செய்தார்

ஜனாதிபதி விஜேதுங்க செய்தித் தணிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தது மட்டுமன்றி

(8ஆம் பக்கம் பார்க்க)

# களம் செல்லும் வேளையில்
# தாய்க்கு மகன் எழுதிய இறுதி மடல்

தமிழீழம்
*1993-11-02*

அன்பின் அம்மா,

என்னை பத்துமாதம் சுமந்து பெத்து வளத்த உங்களுக்கு உங்கட மகன் கடைசியாய் எழுதிற கடிதம் இது. அனேகமாக இந்தக் கடிதத்தை நீங்கள் படிக்கும் போது நான் இறந்து சில நாட்கள் கழிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அம்மா!

வாழவேண்டிய வயதில் நான் இப்படி இறந்து போனது உங்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் கவலையாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் இந்த நாட்டு நிலைமையைப் புரிந்து கொண்டு அமைதியாக இருப்பதே நீங்கள் எனக்குச் செய்யும் அஞ்சலி. என்னைப் போல எத்தனையோ பேர் இந்த நாட்டுக்காக வீரச்சாவடைந்தது உங்களுக்குத் தெரியும். அந்த வழியில் நானும் செல்கிறேன் ..

அம்மா!

உங்களுக்கு முதல் மூன்று பிள்ளைகளும் பெண்பிள்ளைகள் பிறந்த போது ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்று கதிர்காமக் கந்தனுக்கு நேத்தி வைத்ததாயும் அதன் பிறகுதான் நான் பிறந்ததாயும் நீங்கள் சொல்லிக் கேட்டேன். கடவுளிட்ட நேத்தி வைத்து பிறந்த பிள்ளை வாழும் வயதில இப்படிச் சாவது உங்களுக்கு எப்படிக் கவலையைக் கொடுக்கும் என்று எனக்குத் தெரிகிறது.

வாழ்க்கையை உணர முடியாத இளம் வயதில் நான் செய்த குழப்படிகளையும் குறும்புகளையும் தாங்கிக் கொண்டு என்னை ஒரு மனிதனாக உருவாக்க நீங்கள் பட்ட பாட்டையும் நான் அறிவேன்.

நான் படிக்க வேண்டும் பட்டம்பெற வேண்டும், நல்ல உத்தியோகம் பார்க்க வேண்டும். ஊர் உலகம் போற்ற நான் வாழ வேண்டும் என்று நீங்கள் கண்ட கனவும் எனக்குத் தெரியும்.

இத்தனையையும் தெரிந்து கொண்டும் நான் இயக்கத்தில் சேர்ந்து போராடி வீரச்சாவடைந்து விட்டனே என்று நீங்கள் இப்போது நினைப்பதுவும் எனக்கு கேட்கிறது.

தாயே!

என் தாய் நீங்களும், உங்கள் தாயும் தாயின் தாயும் .. இப்படியே எங்கள் பரம்பரை வாழ்ந்த மண்ணம்மா இந்த மண். நாங்கள் பிறந்ததும், நாலு எழுத்து படித்ததும், வயல் விதைச்சதும், அருவி வெட்டினதும், கூடி மகிழ்ந்ததும், வீடு கட்டி வாழ்ந்ததும் இந்த மண்ணில் தான். எங்கட வீட்டு முற்றத்தில கிடக்கிற ஒரு பிடி மண்ணை எடுத்து மணந்து பாருங்கோ என்ர பூட்டன் கொப்பாட்டன்ர வியர்வை இப்பவும் மணந்து கொண்டு தான் இருக்குது. எங்கட ஊரில் பெய்பிறமழைத் தண்ணீயை அள்ளிப் பாருங்கள் எங்கட பரம்பரையின்ர முகம் எல்லாம் பளிச்செண்டு தெரியும்.

அம்மா!

இந்த மண் எங்கட மண். இது எங்கடநாடு. இந்த நாட்டை இன்னொருதன் வந்து அழிக்க நாங்கள் விடக்கூடாது. பக்கத்து வீட்டு ஆடு எங்கட வீட்டில வந்து பூக்கண்டு கடித்தாலே நாங்கள் சண்டைக்குப் போகிறோம். ஆனால் எங்கட சொந்த நாட்டை சிங்களவன் பிமக்க வாறான். இந்த நேரத்தில் நாங்கள்பார்த்துக் கொண்டு இருக்கேலாது.

நாங்கள் கும்பிடுகிற தட்டான்குளப் பிள்ளையார் கோயிலில பிள்ளையார் சிலைதான் இருக்க வேணுமே தவிர புத்தர் சிலை இருக்கக் கூடாது. நான் அ, ஆ படித்த வீரசிங்கம் பள்ளிக்கூடத்தில சிங்களம் முதல் மொழியாகப் படிப்பிக்க நாங்கள் விடக்கூடாது. நாங்கள் சந்தோசமாக வாழிற எங்கட மண்ணை இன்னொருத்தன் ஆள விடக்கூடாது.

நான் வீரவசனம் கதைக்கிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்த மண்ணில என்ன நடக்க வேண்டுமோ அதையே சொல்கிறேன்.

அம்மா !

''புறநானூறு'' எண்ட புத்தகத்தில நான் படிச்ச ஒரு கதை எனக்கு ஞாபகம் வருகுது. ஒரு தாய் தன்மகனை வேல் கொடுத்து போருக்கு அனுப்புகிறாள். போரில் அந்தப் பாலகன் முதுகில் வேல்பட்டு இறந்து கிடக்கின்றான் என்று யாரோ அந்தத் தாய்க்குச் சொல்லுகிறார்கள். உடனே அந்த வீரத்தாய் தன் மகன் முதுகில் வேல்பட்டு இறந்து கிடந்தால் அவனுக்கு பாலூட்டிய முலையை அறுத்தெறிவேன் என்று அழுதாள். இதை நான் ஏன் எழுதுகிறேன் என்றால் காலத்தின் தேவையால் நான் ஆயுதம் தூக்கினேன். எதிரி எங்கட மண்ணில இருக்கக் கூடாது என்பதற்காக என்னைப் பணயம் வைத்து போராடினேன் அந்த வழியில் இன்று இந்த மண்ணுக்காக மடிந்து விட்டேன்.

தாயே !

ஒன்று மட்டும் உறுதி ! நீங்களும் ஒரு வீரத்தாய் தான். நானும் நெஞ்சிலே குண்டு பட்டுத் தான் சாவேனே தவிர எதிரியைக் கண்டு கலங்க மாட்டேன்.

அம்மா !

கிளிநொச்சியில் இருக்கிற எங்கட வயலுக்கு எங்களால் இண்டைக்கு சுதந்திரமாக போக முடிகிறதா ! சிங்களவன் எங்கட பாதையை தடை செய்யப் பார்க்கிறான் எங்கட பாதையைத் தடை செய்யிற சிங்களவனுக்கு ஒரு பாடம் புகட்ட எங்கட தலைவர் ஒரு மிகப் பெரும் தாக்குதலுக்கு தயார் செய்தார் அந்தத் தாக்குதலில் நானும் பங்கு கொண்டு எங்களைத் தடுத்து நிக்கிற எதிரியை அழிக்க போராடி மடிகின்றேன். நான் மடிந்தாலும் எங்கட தலைவரும் என்சக போராளிகளும் நிச்சயமாக இந்தப் பாதையை மட்டுமல்ல தமிழ் ஈழத்தையே விடுவிப்பினம் என்கிறதில சிறிதளவேனும் சந்தேகம் வேண்டாம்.

அம்மா !

கடைசி நேரத்தில் உங்களையும் சொந்த பந்தங்களையும் ஒருக்காப் பார்க்க வேணும் போல இருக்குது. ஆனால் அது எங்கட போராட்டத்தைப் பொறுத்தவரையில முடியாத ஒண்டு ஏனென்றால் எதிரிக்கு மிக பெரிய இழப்பையும் அழிவையும் நாங்கள் ஏற்படுத்த வேணுமென்றால் நாங்கள் சில கட்டுப்பாடுகள் மூலம் தியாகங்களைச் செய்ய வேண்டி உள்ளது. அதற்காக இதையும் பொறுத்துக் கொள்கிறேன்.

அம்மா !

எனக்காக நீங்கள் பெரும் எடுப்பில அந்தியேட்டி துவசம் எடுக்க வேண்டாம். நான் இறந்த நாளில எங்கட சொந்த பந்தங்களுக்கும் என் சக போராளிகளுக்கும் போசனம் கொடுங்கள். அத்தோட என்னைப் போல போராடிக்கொண்டிருக்கின்ற போராளிகள் அடிக்கடி எங்கட வீட்டுக்கு வருவார்கள். அவர்கள் எல்லோரையும் என்னைப்போல நினைத்து உபசரியுங்கள்.

அத்தோடு எங்கட தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் எத்தனையோ ஏழைக் குழந்தைகளைப் பராமரிக்கின்றார். அதில சுன்னாகத்திலையும் ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையம் இருக்குது. நான் இறந்த நாளில் ஒவ்வொரு வருடமும் அந்தக் குழந்தைகளுக்கு பலகாரம் செய்து கொண்டு போய் கொடுங்கள். அவர்களும் என்ர சகோதரங்கள் தான் உங்கள் பிள்ளைகள் தான்.

இவ்வளவுதான் அம்மா, உங்களுக்கு மட்டும் தான் கடிதம் எழுதுகிறேன். எல்லோரையும் சமாதானப்படுத்தவும். என்னை நினைத்துக் கவலைப்பட வேண்டாம். தொடர்ந்தும் இந்தப் போராட்டத்திற்கு உங்களால் ஆன அதி கூடிய பங்களிப்பைச் செலுத்த வேண்டும். அதுதான் எனக்கு நிம்மதியைத் தரும். அம்மா!

விடைபெறுகிறேன் தாயே, விடை கொடுங்கள் -

நன்றி

**வே. கலையரசன்**
அன்பு மகன்


## இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ் கிளை

### அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை அண்மையில் தட்டச்சு, சுருக்கெழுத்தாளர், ஆசிரியர், கணக்குப் பதிவாளர் பதவிகளுக்காக நடாத்திய செய்முறைப் பரீட்சையில் தோற்றிய தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை 04 12 93 மு.ப 10.00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
கௌரவ செயலாளர்

(சி-8041)


## பூநகரியில்

நாட்டில் நடைபெறும்யுத்தம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு உண்மை நிலை தெரியப் படுத்தப்பட வேண்டும் என்று தகவல் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்தார்

நடவடிக்கை தலைமையகத்தின் செய்திகள்ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த தகவல் திணைக்களத்திற்கு சில தடுமாற்றம் ஏற்பட்டிருந்தது. இதனால் வழமைக்குமாறாக அது பிற்பகல் பூட்டப்பட்டிருந்தது. நடவடிககை தலைமையகம் மட்டும் எல்லா நேரமும் திறந்து இருந்தது


## இதோ!
## நவம்பர் மாத அதிர்ஷ்டசாலிகள்

1 -ம் பரிசு ரூபா. 2500/- ச. சிவதேவன்
சிட்டை இல. 2538 161 / 4 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
2 -ம் பரிசு ரூபா. 1500/- அ. சிவகுமார்
சிட்டை இல. 2614 பானு பாதணி நிலையம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
3 -ம் பரிசு ரூபா. 1000/- K. சிவகணேசன்
சிட்டை இல. 1952 தாவளை, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை

நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆக இன்றே வருகை தாருங்கள்

## எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(சி-8045)



மாபெரும்
## மௌன ஊர்வலத்திற்கான
## அழைப்பு

இன்று (03-12-93) காலை 9.00 மணிக்கு நடைபெறும் மௌன ஊர்வலத்தில் சகல பொதுமக்கள், மத ஸ்தாபனங்கள், வர்த்தக சங்கங்கள், செயலகங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் எனப் பன்முகப்பட்ட அமைப்புகள்சார்பிலும் மக்கள்பேரணி திரள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

### ஆரம்பமாகுமிடம்:
### குருநகர் புனித யாகப்பர் ஆலயம்

பங்குத் தந்தையும்,
(சி8044) அமைப்புக் குழுவினரும்.



## யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
-செங்கை ஆழியான்-

மேற்படி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிறு(05-12-1993) பி. ப. 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அல்புடன் அழைக்கின்றோம்.

(6743) யாழ். இலக்கிய வட்டம்.

# வட இந்திய மாநிலத் தேர்தல்கள்
# தேசிய கட்சிகளுக்கு ஓர் எச்சரிக்கை!

அண்மையில் வட இந்திய மாநிலங்களில் குறிப்பாக ஹிந்திபேசும் நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தல் குறித்து 'இந்தியா டுடே' செப்டம்பர் - ஒக்டோபர் மாத இதழில் எழுதுகையில், ''கடந்த இருபது வருடங்களில் நடந்தவற்றிலேயே அதி முக்கியமான தேர்தலாக இத் தேர்தல் அமைந்தாலும் அமையலாம்... இது ஒரு தேர்தல் என்ற அளவுடன் நிற்காது தேசத்தின் அரசியலுக்கு கருத்து ரீதியான புதிய பரிணாமம் சேர்க்கக்கூடியவகையில் பா. ஜ. க வின் இந்துத்துவம் பற்றிய கருத்து வாக்கெடுப்பாக அமையும். . 'பிரதமர் நரசிம்மராவிற்கோ இது ஒரு கண்டம்தான். தேர்தலில் காங்கிரஸ் கணிசமாகச் சரிவடைந்தாலும் ராவ் பதவி துறக்க கட்சிக்குள்ளேயே போட்டியாளர் கோரும் குரல் வலுக்கும்'' எனக் குறிப்பிட்டது.

''இந்தியா டுடே'' குறிப்பிட்டதுபோல் பாரதிய ஜனதாக் கட்சியின் இந்து தத்துவ கோட்பாட்டிற்கும், பிரதமர் நரசிம்மராவின் தலைமைக்குமான ஒரு பரிசோதனைக் களமாக இத் தேர்தல் அமைந்தது என்பதில் எதுவித தவறுமில்லை. ஆனால் இத் தேர்தல் முடிவுகள் இவ் இரண்டு அம்சங்கள் மட்டும் பிரதிபலிக்கவில்லை, வேறு பல அம்சங்களும் பிரதிபலித்ததையேகாட்டி நிற்கின்றது. அதாவது, தேசிய அரசியல் என்பதற்கு மாறாகப் பிராந்திய அதாவது மாநிலங்கள் ஒவ்வொன்றிற்குமான தனிப்பட்ட பல்வேறு அம்சங்களும் தேர்தலில் பிரதிபலித்துள்ளதையே காணக்கூடியதாக உள்ளது

கலைக்கப்பட்ட நான்கு மாநிலங்களுக்கான தேர்தல் முடிவுகளின்படி வெளிப்படையான பின்னடைவை பாரதீய ஜனதாக் கட்சியும், ஜனதாதளமும் சந்தித்துள்ளன என்றே கூறவேண்டும். அதாவது நான்கு மாநிலங்களில் ஆட்சிசெய்த பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை வலுவை எந்த மாநிலத்திலும் பெறத்தவறிவிட்டது. ராஜஸ்தானிலும், உத்தரப் பிரதேசத்திலும் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள போதிலும் பெரும்பாலும் ராஜஸ்தானில் மட்டுமே ஆட்சி அமைக்கும் வாய்ப்பு கிட்டலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை டில்லி சட்டசபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாரதீய ஜனதா பெற்றிருப்பது தலைநகரில் அதன் பலத்தை காட்டுவதாக உள்ளது இருப்பினும் டில்லியில் பெற்ற வெற்றியால் மூன்று மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தை இழந்ததை ஈடுகட்ட முடியாது.

இதேவேளை தோல்வியைப் பொறுத்து ஒரு 'தேசியக் கட்சி' என்ற அந்தஸ்தையே முழுமையாக இழந்துள்ள கட்சியாக ஜனதா தளம் மாறியுள்ளது கலைக்கப்பட்ட நான்கு மாநிலங்களிலும் பிரதான எதிர்க்கட்சியாக இருந்த இக் கட்சியானது தேர்தலில் சிறு கட்சிகள் போன்று ஓரிரு இடங்களை தக்கவைத்துக்கொள்ளவே முடிந்தது. அதாவது அரசியலில் ஒரு வலுவுள்ள கட்சி என்ற ஸ்தானத்தை இது இழந்துள்ளது என்பதே உண்மையாகும்.

இந்திரா காங்கிரசைப் பொறுத்து இத்தேர்தலானது கணிசமான அளவில் வெற்றியைக் கொடுத்த தேர்தல் என்றேகூறவேண்டும். கடந்த தேர்தலில் இம் மாநிலங்கள் யாவற்றிலும் மூன்றாம்இடத்தில் இருந்த இக்கட்சி இமாலயப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் என்பனவற்றில் அறுதிப்பெரும்பான்மை பெற்றுள்ளதோடு உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி அமைப்பதைத் தீர்மானிக்கக் கூடிய சக்தியாகவும், ராஜஸ்தானில் ஆட்சி அமைப்பதற்கு முயற்சிக்கும் அளவில் பலம்பொருந்தியதாகவும் மாறியுள்ளது. ஆயினும் இந்தியாவில் பெரிய மாநிலமும் இதுவரை — நரசிம்மராவிற்கு முன்பு வரை— காங்கிரஸ்கட்சியின் தலைவர்களையும், இந்தியாவின் ஆட்சித் தலைவர்களையும்உருவாக்கிய மாநிலம் காங்கிரசைப் புறக்கணித்ததென்பது காங்கிரசிற்குப் பெரும் தாக்கம் விளைவிக்கக்கூடியதுஎன்பதில் சந்தேகமில்லை.

இதேவேளை உத்தரப் பிரதேசத்தில் பிராந்தியக் கட்சிகளின் கூட்டு ஒன்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் அளவிற்குமுன்னேறியுள்ளமையானது ஹிந்தி பேசும் மாநிலங்களில் உருவாகியுள்ள புதிய திருப்பமாகும் இது தேசிய நலன் என்பதை விட பிராந்திய / மாநில நலன் என்பதிலேயே மக்கள் அக்கறை காட்டுவதையும்,தேசிய ரீதியில் நம்பிக்கைக்குரிய தலைவர்கள் எக்கட்சியில் இல்லை என்பதையும் இது வெளிக்காட்டுவதாகவும் இருந்தது. இது எதிர்காலத்தில் இந்தியஅரசியலில்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

கடந்த ஆண்டின் இறுதியில் அயோத்தியில் பாபர் மசூதி இந்துத் தீவிரவாதிகளால்-பாரதீய ஜனதா தலைமையிலான-தகர்க்கப்பட்டபின்னர் இந்தியாவின்அரசியலில் பாரதீய ஜனதாக் கட்சி கிழித்த கோட்டிலேயே செல்வதாக இருந்தது. இந்நிலையில் தேர்தலை எதிர்கொண்ட பாரதீய ஜனதாக் கட்சி அதில் முழுமையான வெற்றி பெற்றிருக்குமானால் இந்திய அரசியலில் ஒரு புதிய பரிணாமத்தைப் பெற்றிருக்கும்.

ஆனால் பாரதீய ஜனதாவின் 'இந்துதத்துவம்' ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அப்பால் செல்ல முடியவில்லை. பாரதீய ஜனதாக் கட்சி பிராமணர்களையும், பனியாக்கர்களையும் மற்றும் உயர்ஜாதி இந்துக்களினதும் கட்சிஎன்றே அழைக்கப்பட்டுவருவதுண்டு. ஆனால் இதனை மாற்றுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது நடைமுறைச் சாத்தியமாகவில்லை என்பதையே இத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துவதாக வுள்ளது.

இதேவேளை, இத் தேர்தலானது, காங்கிரஸ் கட்சி கடைப்பிடித்ததாகக் கூறிக் கொள்ளும் மத சார்பின்மை முஸ்லிம்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டதொன்றாக மாறியுள்ளது. இதுவரை உத்தரப்பிரதேசத்தில், காங்கிரஸ் கட்சிக்கு கை கொடுத்துவந்த முஸ்லிம்கள் காங்கிரஸை இத்தேர்தல் மூலம் இம்முறை நிராகரித்து விட்டார்கள்.

பாபர்மசூதி தொடர்பான பிரச்சினையில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி செயற்படுவோம் எனக் காங்கிரஸ் வாக்குக்கொடுத்திருந்த போதும்,முஸ்லிம்கள் அதனை ஏற்கத்தயாராக இருப்பதாகத்தெரியவில்லை. பாபர் மசூதியைஉச்சநீதிமன்றம்காப்பாற்றுமாறு இட்ட உத்தரவை காங்கிரஸ் கட்சி கைவிட்டதை முஸ்லிம் மக்கள் மறந்துவிடவில்லைப்போல் தெரிகின்றது.

இதேவேளை, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் பகுதியில்காங்கிரஸின் கணிசமான வெற்றியானது பாரதீய ஜனதா கட்சி, ஜனதாதளம் என்பனவற்றைவிட பிற்படுத்தப்பட்ட / ஹரிஜனங்கள் காங்கிரஸின்மீது நம்பிக்கைவைத்துள்ளதைக் காட்டுவதாகவே உள்ளது.

ஆனால், உத்தரப்பிரதேசத்தில் முலாயன்சிங் யாதேவையும், கன்சிராமையும் பிற்படுத்தப்பட்ட மக்களும் / ஹரிஜனங்களும் பெருமளவில் ஆதரித்துள்ளதைப் பார்க்கும் போது, காங்கிரஸ் கொள்கையில் கொண்டுள்ள நம்பிக்கை என்பதைவிட காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அர்ஜூன்சிங்கின் தலைமை மீது,மக்கள் நம்பிக்கைகொண்டுள்ளதைக் காட்டுவதாகவே உள்ளது.

ஜனதாதளம் இத் தேர்தலில் பரிதாபகரமாகத் தோற்றுப்போனதுதான் மற்றொரு முக்கியமான அம்சமாகும். 'மண்டல் ராஜா' என்றும், 'பிற்படுத்தப்பட்டவர்களின் ராஜா' எனவும் அழைக்கப்பட்ட பி பி.சிங்கின் அரசியல் வாழ்வு ஜனதாதளத்தின் இத் தோல்வியுடன் முடிவிற்கு வந்து விட்டதா? என்ற அளவிற்கு ஜனதாதளம் தோற்றுப்போயுள்ளது.

இத்தோல்வியானது ஹிந்தி பேசும் மாநில மக்கள் இவர்களின் தலைமைத்துவத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடே ஆகும். 1990இல் பிற்படுத்தப்பட்ட-ஹரிஜனங்களுக்காக, அதாவது மண்டல் கமிசன் தொடர்பான பிரச்சினையால் எழுந்த அரசியல் புயலினால் வி பி. சிங் பதவிதுறக்க வேண்டி இருந்த போதும்ஜனதாதளம் அடைந்துள்ள தோல்வியானது, அம்மக்களினாலேயே அவர்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள் என்பதையே காட்டுவதாகவுள்ளது

இதனைவி.பி சிங்கைமட்டும் புறக்கணித்ததாகக் கொள்ள முடியாது. அவருடன் தற்பொழுது மீண்டும் இணைந்த அஜித்சிங், சந்திரசேகர் உட்பட சகல தலைவர்களையும் மக்கள் நிராகரித்ததாகவே கொள்ளவேண்டும்.

மக்கள் ஒரு முறை தேர்ந்தெடுத்த போது அதிகார ஆசையினால் சிதறிப் போன இதன் தலைவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்த போதும் இவர்கள் மீதுமக்கள்நம்பிக்கைவைக்கத்தயாராக இல்லைஎன்பதையே இது காட்டுவதாக உள்ளது. அதாவது மக்கள் முனைப்புடன் செயற்படக்கூடிய நம்பிக்கைக்குரிய, கொள்கைப்பிடிப்புள்ள தலைவர்களை விரும்புவதாகவே தெரிகிறது.

இதேவேளை, உத்தரப்பிர பிரதேசத்தில் முலாயம் சிங் யாதேவ் தலைமையிலான சமாஜ்வாதி கட்சியும் - கன்சிராம் தலைமையிலான பகுஜன் சமாஜ்கட்சிக் கூட்டணியும் பெற்றுள்ள வெற்றி

**ஜெயராஜ்**

யானது இந்திய தேசிய நலனுக்கும் அப்பால் சிறுபான்மை மக்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் தமது பாதுகாப்பு, நலன் என்பன குறித்துகொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாகவுள்ளது

காங்சிரசும், ஜனதாதளமும் உத்தரப்பிரதேசத்தில் ஒதுக்கப்பட்ட நிலையில், பாரதீய ஜனதாவும் முலாயம் சிங் - கன்சிராம் தலைமையிலான கூட்டணியும் சமபலம் பெற்றுள்ளமையானது இந்து அடிப்படைவாதமும்- ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை மதத்தினரும் தெளிவாக முரண்பட்டு நிற்பதைக் காட்டுவதாகவே உள்ளது இந் நிலையானது ஒருவகையில் இதுவரை இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தில் இருந்துவந்த உயர் இந்துக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சவால் என்று கூடச் சொல்லலாம்

ஆனால் ஒட்டுமொத்தமாக இத் தேர்தலின் மூலம் காங்கிரஸ் கட்சி கணிசமான இலாபம் ஈட்டிக் கொண்டுள்ளதென்றே கூறலாம். இதன் காரணமாக மத்தியிலுள்ள காங்கிரஸின் ஐந்து வருட ஆட்சிக் காலம் சிக்கலின்றிப் பூர்த்தி செய்யப்படலாம் என்றும் எதிர்பார்க்கலாம். அதாவது சிறுபான்மை அரசாங்கமான காங்கிரஸ் அரசாங்கம் இடையில் கலைக்கப்பட வேண்டிய அபாயம் நீங்கியுள்ளது எனலாம்.

ஆனால் இத்தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்றியது போன்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவைக் காப்பாற்றுமா என்பது கேள்விக்குரியதொன்றாகவே இருக்கும், ஏனெனில் மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ்பெற்றுள்ள அமோக வெற்றியானது காங்கிரஸிற்குள் அர்ஜூன் சிங்கின் கருத்தை பெரிதும் பலப்படுத்தக்கூடும்.

ஏற்கனவே தீர்மானம் எடுக்க முடியாதவர், கவர்ச்சியற்ற தலைவர்கள் எனக் குறை கூறப்படுவதுடன் பாரதீய ஜனதாக் கட்சியின் இந்து தத்துவக் கோட்பாட்டிற்கு ஆதரவான போக்குடையவர் என்ற குற்றச் சாட்டும் பிரதமர் நரசிம்மராவ்மீது உண்டு.

இந்நிலையில் உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ்கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு நரசிம்மராவே பொறுப்பேற்க வேண்டியநிலை ஏற்படக் கூடும். இது நரசிம்மராவிற்கு புதிய நெருக்கடிகளை உருவாக்கக் கூடும். இதன் மூலம் நரசிம்மராவிடம் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவப் பதவி அல்லது பிரதமர் பதவி இரண்டில் ஒன்றிற்கு அல்லது இரண்டிற்கும் அர்ஜூன்சிங் குறிவைக்கலாம்.

ஆனால் வெளியிலுள்ள எதிரிகளைச் சமாளிப்பதை விட உள்ளுக்குள் உருவாகும் எதிரிகளைச் சமாளிப்பதில் தனது பெரும் நேரத்தை செலவிடுபவரும்,அதில்ஓரளவு வெற்றிகளைக் கண்டவருமான நரசிம்மராவ் தற்பொழுதே அர்ஜூன் சிங்கை எதிர்கொள்ளத் தயாராகியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.இதனைநரசிம்மராவ் எவ்வாறு எதிர்கொள்வார் என்பதை மத்திய பிரதேசம், இமாலயப் பிரதேசம் ராஜஸ்தான் ஆகிய சட்ட சபைகளுக்கான காங்கிரஸ் உறுப்பினர்களின் தலைவரைத் தெரிவதில் இருந்தே புரிந்து கொள்ளமுடியும்.

ஆனால் இது எவ்வாறானாலும் தளமில்லாத தலைவர் நரசிம்மராவிற்கு எப்பொழுதும் தலைவலி இருந்து கொண்டே இருக்கும்.

---

## மாவீரர்வார

கொடுத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டு களத்தில் இறங்கிப்போராடி, தங்கள் இன்னுயிரை ஈந்து வீரச்சாவைத் தழுவிய பல்லாயிரக்கணக்கான மாவீரர்களை நினைவு கூருகின்ற வகையிலே, அவர்களது அருஞ்செயல்களை, வீரதீரங்களை, ஈகங்களை, வெளிக்கொண்டுவந்து, அவர்களை ஏற்றிப்போற்றுகின்ற வகையிலே, நவம்பர் 27 ஆம் நாளை ஆண்டுதோறும் மாவீரர் நாளாக, தேசியத் திருநாளாக, மக்கள் எழுச்சி நாளாகக் கடைப்பிடிப்பதென எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 1989ஆம் ஆண்டு முதல் மாவீரர் நாள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

1989 இல் முதன் முதல் மாவீரர் நாளை தேசியத் திருநாளாக தமிழீழ மக்கள் எழுச்சியுடன் கடைப்பிடித்தனர். தமிழீழ மாவீரரை நினைவுகூருவதிலும், அவர்களை ஏற்றிப் போற்றுவதிலும், அவர்களது அருஞ்செயல்களை வெளிக்கொணர்வதிலும், தமிழீழ மக்கள் வெளிப்படுத்திய பேரார்வம் எல்லையற்றதாக இருந்தது. ஆயிரக்கணக்கான மாவீரர்களை நினைவு கூருவதிலும் தமிழீழ மக்கள் தமது எழுச்சியை, ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு ஒருநாள் போதாதென்ற நிலையில், 1990ஆம் ஆண்டில் இருந்து நவம்பர் 21-27 வரையான ஏழு நாட்கள் மாவீரர் வாரமாக அறிவிக்கப்பட்டு, ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மாவீரர் நாளோ, மாவீரர் வாரமோ தமிழீழத்தின் தேசியத் திருநாளாக ஆகிவிட்ட நிலையில், இந்த ஆண்டு நடைபெற்று முடிந்த மாவீரர் வாரத்தின் நிகழ்வுகள் நிறைவானவையாக இருந்தனவா? அல்லது அவற்றில் ஏதாவது மாற்றங்கள் தேவையா? திருத்த வேண்டிய குறைபாடுகள், நீக்க வேண்டிய தவறுகள் இருந்தனவா? என்பவை பற்றி தமதுஎண்ணக்கிடக்கைகளை வெளிப்படுத்துவது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையும், உரிமையும்ஆகும்.

எனவே மாவீரர்வார நிகழ்வுகள் பற்றி, மாவீரர்களை, அவர்களது பெற்றோரை, மதித்துப் போற்றுவதற்கான நிகழ்ச்சிகள்பற்றி, அதற்காக கடைப்பிடிக்கப்பட்ட, ஒழுங்குமுறைகள்பற்றி தமக்குத் தோன்றிய, தோன்றுகின்ற, எண்ணங்களை, கருத்துக்களை தமிழீழ மாவீரர் பணிமனைக்கு நேரிலோ, எழுத்து மூலமோ தெரியப்படுத்தி மாவீரர் வாரத்தை, மாவீரர்நாளை, முழு நிறைவான திருநாட்களாக நடத்துவதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ மக்களை நாம் வேண்டிநிற்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'சின்னவிழிகள்' குறும்படம் நாளை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய ''சின்னவிழிகள்'' வீடியோ குறும்பட வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 4 00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. இவ் விழா யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் அன்பரசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் நிதர்சனம் பொறுப்பாளர் தமிழன்பன், மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா ஆகியோர் ஈகைச்சுடரை ஏற்றிவைப்பர். தீவக கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் குமணன் வரவேற்புரையையும், கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் சேரலாதன் வெளியீட்டு உரையையும் நிகழ்த்துவர்.

கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வெளியிட்டு வைக்க யாழ். மாவட்டத் தளபதி மகான் பெற்றுக் கொள்வார் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் கலைஞர்களைக் கௌரவிப்பார். சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், மதிப்புரைகளை அ. ஜேசுராசா, செம்பியன் செல்வன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வெள்ள நிவாரண நடவடிக்கை சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று செயலகத்தில் இன்று காலை 10-30 மணிக்கு நடைபெறவுள்ளது

மேற்படி கலந்துரையாடலில் சகல பிரதேச செயலாளர்களையும் வெள்ள நிவாரணநடவடிக்கையுடன் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் ப. திலகநாயகம் கேட்டுள்ளார்.

## வினாத்தாள்கள் வந்துசேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஆறாம் திகதி தொடக்கம் நடைபெற இருக்கும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கான முதலாம் தொகுதி வினாத்தாள்கள் நேற்று மாலை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டன (பா)(நி)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 15 வயது பிரிவு இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2. 00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளது. மூன்றாம் இடத்திற்கு புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வித்தியாலயமும் முதலாம் இடத்திற்கு யாழ் இந்துக்கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும் மோதவுள்ளன.

இப்போட்டிகளில் முதலிடம் பெறும் அணிக்கு விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் லெப். கேணல் இம்ரான் நினைவு சுற்றுக் கிண்ணம் வழங்கப்படவுள்ளது

இதேவேளை 19 வயதுப் பிரிவின் அரையிறுதிப் போட்டியில் இன்று காலை 8மணிக்கு யாழ். பல் கலைக்கழக மைதானத்தில் மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரியும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து புனித கென்ரியரசர் கல்லூரியும் மோதுகின்றன.

# வன்னிப் பிரதேசத்தில் மீட்புநிதி மீளளிப்பு

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீள் அளிப்புத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சியையும், மன்னாரையும் சேர்ந்த ஐம்பது கடனாளிகளுக்கு தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிக்கப்பட்டது.

நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தியால் இக் கடன் மீளளிக்கப்பட்டது. முல்லைத் தீவுக் கோட்டத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கடனாளிகளுக்கு முள்ளியவளையிலும், கிளிநொச்சி, வவுனியா, மன்னார்ப் பகுதிகளைச் சேர்ந்த கடனாளிகளுக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் வைத்துக் கையளிக்கப்பட்டது.

## சதுரங்க சுற்றுப்போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழா தொடர்பான ஆசிரியர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டித் தொடர்ச்சி இன்று காலைஒன்பதுமணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

## அறிவியல் கருத்தரங்கு

யாழ். நாயன்மார் கட்டு அறிவியல் கருத்தரங்குத் தொடர் 17, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். மேற்படி கருத்தரங்கில் முதுபெரும் அறிஞர் ''சொக்கன்'' கருத்துரை வழங்குவார். தொடர்ந்துஒளிவீச்சும் காண்பிக்கப்படும்.

# உதைபந்தாட்டப்போட்டியில் சென்ஜேம்ஸ் முதலிடம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே யாழ் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 17- வயதுப் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று மாலை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் யா- சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம், யா-சென்ஜோசப்வித்தியாலயத்தை 2-0 என்னும் கோல்கணக்கில் வெற்றிபெற்றது 3-ம் இடத்தைப்பெறும் போட்டியில் அருணோதயாக் கல்லூரியை, சென் ஹென்றீஸ் அணி 3-1 எனும் கோல்கணக்கில் தோற்கடித்தது.

வெற்றி பெற்ற அணிக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை வழங்கிய மாவீரன் இராஜேந்தர் நினைவு சுழற்கிண்ணம் வழங்கப்பட்டது. (9, 11)


உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

02- 12- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11587

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்: இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்: 26-2745, 41-7109, 28-4183, 26-3130.



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ்நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

"BIG BOSS"

(சிறந்த கராட்டிப் படம்)

தினசரி பி.ப. 4.00 மணி, மாலை 6.00 மணி

சனி, ஞாயிறு காலை 10.30, பி.ப. 2.30, 4.00 மாலை 6.00 மணி (சி-7852)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

**தாக்குதலைக்**

றும் மதத் தலைவர்கள், வணபிதாக்கள், அருட்செல்வியர், யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய பங்கு மக்கள், பாடசாலை மாணவ மாணவிகள், பொதுமக்கள் பெருமளவில் அணிவகுத்துச் செல்ல உள்ளனர்.

ஊர்வலம் காலை 9 00 மணிக்கு ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகிபிரதான வீதி, முதலாம் குறுக்குவீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம் வீதி, றக்கா வீதி கோவில் வீதிச் சந்தியைச் சென்றடைந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிட பணிமனையில் மகஜரின் பிரதிகளில் ஒன்று கையளிக்கப்படும்.

அங்கிருந்து தொடர்ந்து கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி ஊடாக யாழ் செயலகத்தை அடைந்து அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படுவதுடன் மௌன ஊர்வலம் முடிவு பெறும். (21)

**பூநகரிச்**

குச சென்றாரே அல்லாமல் போர்க்களத்துக்குச் செல்லவில்லை. இராணுவத்தளபதி கொழும்பிலிருந்து போர் புரிகிறார் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.




# மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் வெற்றி

மத்தியப் பிரதேச சட்டப் பேரவைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளது. இந்த மாநிலத்தில் மொத்தமுள்ள 320 தொகுதிகளில் தேர்தல் நடந்த 316 தொகுதிகளுக்கும்உத்தியோக பூர்வமான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்திரா காங்கிரஸ் 171 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது. பாரதீப ஜனதா கட்சிக்கு 116 இடங்கள் கிடைத்துள்ளன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரண்டுஇடங்களையும், மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்தையும், ஜனதா தள் நான்கு இடங்களையும், பகுஜன் சமாஜ் 11 இடங்களையும், சுயேட்சையாளரும் எதிர்க்கட்சிகளும் 11இடங்களையும் பெற்றுள்ளன.

பல்கலைக்கு தெரிவானோருக்கு

# ஒரு வருட தற்காலிக ஆசிரியர் நியமனம்

பல்கலைக் கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு தற்காலிக அடிப்படையில் ஆசிரிய நியமனம் வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் கிட்டத்தட்ட ஒருவருடங்களுக்கு மேலாக பல்கலைக் கழக நுழைவிற்காகக் காத்திருக்கின்றனர்.

தற்போது நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை நிரப்ப கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளில் தேர்ச்சி பெற்று பல்கலைக் கழக அனுமதிக்காக காத்திருப்பவர்களே இவ் ஆசிரிய நியமனத்தை பெறவுள்ளனர். இவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து ஐந்நூறுரூபா அலவன்ஸாக வழங்கப்படவுள்ளது. இது ஒரு தற்காலிகமான நியமனமாகவே இருக்கும். இதே வேளை ஆங்கில கல்வியை தகுந்த முறையில் போதிப்பதற்காக நாடு தழுவிய ரீதியில் 19 ஆயிரம் ஆசிரியர்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. ஆங்கிலத்தை பயின்று சித்திபெற முற்படும் சகல ஆசிரியர்களுக்கும் சம்பள ஊக்குவிப்பு வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கு ஆங்கிலம் பயில தேவையான வசதிகளும் செய்து கொடுக்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒளி விழா

உரும்பராய் இந்துக்கல்லூரி கத்தோலிக்க மாணவர் மன்றத்தினர் வருடா வருடம் கொண்டாடி வருகின்ற ஒளி விழா வைபவம் இன்று செல்வி சி. சந்திரகாந்தா தலைமையில் நடைபெறுகின்றது.

**அரசாங்கத்தை**

தானமான முறையில் தீர்ப்பதற்கு அரசாங்கத்தை அந்த முயற்சியில் ஈடுபடுமாறு வற்புறுத்துவதற்குத் தவறிவிட்டனர். இது மிகவும் வேதனைக்குரியவிடயம் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

இவர் கனடாவில்நடைபெற்ற சமயங்களும் உலக சமாதானமும் என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கருத்துரை வழங்கிவிட்டு லண்டன் சென்றுள்ளார்.

கனடாவின் ''சமாதான நிதியம்'' ''அமைதிக்கான இருபத்தி நான்கு நாட்கள்'' என்ற அமைப்புக்கள் இலங்கை இனப்பிரச்சினை சமாதான முறையில் தீர்த்து வைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன

இலங்கையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தப்பொறுப்பு சமாதான நிதியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் போர்க்கால சூழ்நிலையில் எண்ணற்றபிரச்சினைகளை ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்நோக்கி வருகின்றனர் இப்பிரச்சினைகள்மாணவர்களது கல்வி ஆர்வத்தைக் குன்றச் செய்பவையாகஉள்ளது. எனினும் மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.